# தாவீது தம் வாழ்வைக் குளறுபடியாக்கிக் கொண்டபோது அவருக்குத் தேவைப்பட்டது என்ன

## (2 சாமுவேல் 11; 12)

*நாம் தாவீதின் சாதனைகளைப் பற்றிப் படித்துக் கொண்டிருந் துள்ளோம், ஆனால் இப்போது நாம், இயக்கும் பற்சக்கரங்களை மாற்றிப் போட வேண்டியதாக உள்ளது. இந்தப் பாடம் தாவீதின் வெற்றிகளைப் பற்றியதல்ல, ஆனால் அவரது துன்பங்களைப் பற்றியதாகும்; இது அவர் தம் சாதனைகளின் மகிமையைப் பற்றியதல்ல, ஆனால் அவரது வாழ்வின் இருண்ட நாட்களைப் பற்றியதாகும். இந்த பாடத்தை நான் "தாவீது தம் வாழ்வைக் குளறுபடியாக்கிக் கொண்டபோது அவருக்குத் தேவைப் பட்டது என்ன" என்று அழைக்கின்றேன்.[1] இது ஒரு நேர்த்தியான தலைப்பு அல்ல, ஆனால் இது நாம் யாவரும் (நம்மை) அடையாளப்படுத்திக் கொள்ளக் கூடிய ஒன்றாக உள்ளது.*

## *தாவீது மிகவும் பெரிய அளவில் தம் வாழ்வைக் குளறுபடியாக்கிக் கொண்டார் (2 சாமுவேல் 11)*

*தாவீது தம் வாழ்வைக் குளறுபடியாக்கிக் கொண்டார் என்பதை நீங்கள் நம்பும்படி நான் உங்களை இணங்கச் செய்ய வேண்டியதில்லை. இது நாம் யாவரும் நன்கு அறிந்த வரலாறாகவே உள்ளது.*

### *பாவம்*

*தாவீது சீரியர்களோடும் அம்மோனியர்களோடும் யுத்தம் செய்து கொண்டிருந்தார். சீரியர்கள் தோற்கடிக்கப்பட்டிருந்தார்கள், அம்மோனி யர்கள் ரப்பா நகரத்திற்குள் திரும்பத் துரத்தப்பட்டிருந்தார்கள். அம்மோனி யர்களின் படை ரப்பா நகருக்குள் அடைந்து கிடந்தது. 2 சாமுவேல் 11ம் அத்தியாயம் பின்வருமாறு தொடங்குகின்றது: "மறுவருஷம் ராஜாக்கள்*

யுத்தத்திற்குப் புறப்படுங்காலம் ன்மீண்டும் பயணம் செய்யச் சாத்தியமான காலம்தி வந்தபோது, தாவீது யோவாபையும், அவனோடே கூடத் தன் சேவகரையும், இஸ்ரவேல் அனைத்தையும், அம்மோன் புத்திரரை அழிக்கவும், ரப்பாவை முற்றிக்கை போடவும் அனுப்பினான் ..." இதன் பின்பு நாம் அழிவு உண்டாக்கும் பின்வரும் வார்த்தைகளை வாசிக்கின் றோம்: "தாவீதோ எருசலேமில் இருந்து விட்டான்" (வ. 1).[2] ன்எனதுதி பாட்டியார், "சும்மா இருக்கும் கைகள் சாத்தானின் தொழிற்சாலையாக உள்ளன" என்ற கூற்றைப் பயன்படுத்துவார்கள்.

சோம்பேறித்தனமான ஒரு வசந்த கால மாலைப் பொழுதில் (RSVயில் இது ஒரு பிற்பகலின் பிற்பகுதியில் என்றுள்ளது), தாவீதின் மனிதர்கள் ரப்பாவில் யுத்தம் செய்து மடிந்து கொண்டிருந்த வேளையில், தாவீது தமது அரண்மனையின் உப்பரிகையில் உலாத்திக் கொண்டிருந்தார்.[3] "ஸ்நானம் பண்ணுகிற ஒரு ஸ்திரீயை உப்பரிகையின்மேலிருந்து கண்டான்; அந்த ஸ்திரீ வெகு சௌந்தரவதியாயிருந்தாள்" (11:2). இந்தக் காட்சியைப் பற்றியும், குற்றம் சாட்டப்பட வேண்டியது யார் என்பது பற்றியும் மிக அதிகமான யூகங்கள் உள்ளன[4] - ஆனால் நாம் விவரங்களை அறிவதில்லை,[5] யூகிப்பதற்கு சிறிதளவே கருத்துள்ளது. [ஆனாலும்] நாம் ஒரு விஷயத்தை அறிந்துள் ளோம்: தாவீது சோதிக்கப்பட்ட போது, அவர் உடனே அவ்விடம் விட்டு அகன்று போயிருக்க வேண்டும். "வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள்" என்று பவுல் கூறினார் (1 கொரி. 6:18). அதற்குப் பதிலாகத் தாவீது, தம் இருதயத்தில் காம இச்சை வளர அனுமதித்தார் - இது எப்போதுமே ஆவிக்குரிய மரணத்திற்கு வழிநடத்துகிற செயல்முறையாக உள்ளது என்று யாக்கோபு கூறினார் (யாக். 1:14, 15).

அந்தப் பெண்ணைப் பற்றி விசாரித்த தாவீது, அவள் ஏத்தியனான உரியாவின் மனைவியாகிய பத்சேபாள் என்று கண்டறிந்தார். ஏத்தியர்கள் என்பவர்கள் இஸ்ரவேலர்களின் வரலாறுடன் ஒன்றாகப் பின்னிப் பிணைக்கப்பட்ட இனத்தவராயிருந்தார்கள் (ஆதி. 23:1-20; 25:9; எண். 13:29; யோசு. 9:1, 2; 11:3; நியா. 3:5, 6; 1 சாமு. 26:6). உரியா என்பவர் பிறப்பினால் இஸ்ரவேலர் அல்ல, ஆனால் அவரது பெயர், "யெகோவா என் வெளிச்சமாக உள்ளார்" என்று அர்த்தப்படுத்துகின்றது, இது அவரோ அல்லது அவர் பெற்றோர்களோ யூதமதத்திற்கு மாற்றப்பட்டிருந்ததைச் சுட்டிக் காண்பிக்கின்றது. 2 சாமுவேல் 23ல் உள்ள தாவீதின் "பராக்கிரம சாலிகளான" மனிதர்களின் பட்டியலை ஆராய்ந்து பாருங்கள்; அதில் உரியாவின் பெயர் உள்ளது (வ. 39; 1 நாளா. 11:41ஐயும் காணவும்). ஏத்தியனாகிய உரியா, தாவீதின் பழைய, நம்பிக்கைக்கு உரிய நண்பர்களில் ஒருவராக இருந்தார், இவர் ஒரு துணிவுமிக்க போர்வீரராக, கடந்த காலத்தில் தாவீதுக்காகத் தம் வாழ்வை பணயம் வைத்த மனிதராக இருந்தார். ஆயினும் இதெல்லாம் தாவீதின் காம இச்சையை அணைத்து விடவில்லை. தேவனுடைய பிரதிநிதியாக நடந்து கொள்வதற்குப் பதிலாக அவர், அந்த நாட்களில் கிழக்கு நாடுகளில் இருந்த அதிகாரமிக்கவர்கள் போல் செயல்பட்டார். அவர் பத்சேபாளைத் தம்மிடத்தில் அழைத்து வரச் செய்து, அவளுடன் விபசாரம் செய்து, பின்பு அவளை வீட்டிற்கு அனுப்பி விட்டார்.[6]

*விரைவிலேயே பத்சேபாள், தான் "கர்ப்பவதியென்று" தாவீதுக்கு வார்த்தை அனுப்பினாள். அது தாவீதுக்கு அவர் தம் பாவத்தைத் தமக்குரியதாக்கி விளைவுகளை மேற்கொள்ள வேண்டிய வேளையாயிருந்தது. அதற்குப் பதிலாக அவர் தாம் செய்த செயலை மறைத்து விட முயற்சித்தார். அவர் யுத்த களத்திற்கு ஒரு செய்தியாளரை அனுப்பி, உரியாவைத் திருப்பி அனுப்பிவிடும்படி அவரது படைத் தலைவரான யோவாபிடம் கூறச் சொன்னார்.*

*அடுத்த ஏழு வசனங்கள், உரியாவின் நேர்மை மற்றும் பற்றுறுதிக்கும், தாவீதின் வஞ்சனை மற்றும் பற்றுறுதியின்மை ஆகியவற்றிற்கும் இடையில் உள்ள நேரெதிரான நிலையை விவரிக்கின்றன. உரியா அரண்மனையை அடைந்தபோது அவர் இன்னும் தமது அழுக்கான உடையிலும் யுத்தக் களைப்பின் முகச் சுருக்கத்திலும் இருந்தார். யுத்தம் எவ்வாறு நடக்கின்றது என்பதைப் பற்றி நேரடித் தகவல் அறிக்கை பெற்றுக் கொள்வது என்பது தான், அவர் உரியாவை அழைப்பித்ததற்கான சாக்குப்போக்காயிருந்தது. அந்த வகையில் அதைப் பிடித்திருந்த தாவீது, அந்த போர் வீரரிடம், "நீ உன் வீட்டிற்குப்போய், பாதசுத்தி செய்" என்று கூறினார் (11:8). வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், "நீ சிறிது ஓய்வையும் பொழுது போக்கையும் ஈட்டியிருக்கின்றாய். வீட்டிற்குச் சென்று உன் மிதியடிகளைக் கழற்றி விட்டு, யுத்த அழுக்கைப் போக்கிக் கொள், உன் கச்சைக்குக் கீழ் வீட்டில் சமைத்த உணவைப் பெற்றுக் கொள், ஓய்ந்திரு, உன் மனைவியுடன் சற்று நேரம் சல்லாபம் செய்" என்பதே இதன் அர்த்தமாயிருந்தது. உரியா நிதானிக்க முடியாதிருந்தால், அது தனது (உரியாவின்) பிள்ளையென்றே நினைப்பார் என்று தாவீது கணக்கிட்டார். உரியா, அரியணை இருந்த அறையை விட்டு வெளியேறுகையில், அவருக்குப் பின்னால் தாவீது ஒரு வெகுமதியையும் அனுப்பினார்,[7] இது அவர் (உரியா) தம் இல்லம் செல்வதற்குக் கூடுதலான ஊக்குவிப்பாயிருந்தது.*

*ஆயினும், உரியா தம் கடமையின் மீது கொண்டிருந்த ஒப்புவிப்பைத் தாவீது கணக்கிடவில்லை. உரியாவின் வீடு சில தப்படிகளுக்கு அப்பால் தான் இருந்தது (அவ்வீட்டைத் தாவீது தம் அரண்மனை உப்பரிகையில் இருந்து காண முடிந்திருந்ததே), ஆனால் அவர் (உரியா) தம் வீட்டிற்குச் செல்லவில்லை. அதற்குப் பதிலாக அவர் யுத்தக்களத்தில் அணிந்திருப்பவைகளுடன், "ராஜ அரண்மனையின் வாசலிலே தன் ஆண்டவனுடைய எல்லாச் சேவகரோடுங் கூடப் படுத்துக் கொண்டிருந்தான்" (11:9)! இது தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது, அவர் திகைப்படைந்தார். அவர் தமக்குத் தாமே உரியாவைக் குறித்து முடிவு செய்திருந்தார்; பத்சேபாளைவிட்டு விலகியிருக்க எவராலாவது முடியும் என்று அவரால் கற்பனை செய்து பார்க்கவும் முடியாதிருந்தது. அவர், கட்டுறுதி வாய்ந்த அப்போர்வீரரைத் தம்மிடத்தில் அழைப்பித்து, "நீ பயணத்திலிருந்து வந்தவன் அல்லவா; நீ உன் வீட்டிற்குப் போகாதிருக்கிறது என்ன?" என்று கேட்டார் (11:10). இதற்கு உரியா அளித்த பதிலானது, தாவீதின் பராக்கிரமசாலிகளின் பண்பாக விளங்கிய விடாப்பிடியான பற்றுறுதியை வெளிப்படுத்துகின்றது:*

*பெட்டியும்[8] இஸ்ரவேலும் யூதாவும் கூடாரங்களிலே தங்கி, என் ஆண்டவனாகிய யோவாபும் என் ஆண்டவனின் சேவகரும் வெளியிலே பாளையமிறங்கியிருக்கையில், நான் புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும், என் மனைவியோடே சயனிக்கிறதற்கும், என் வீட்டிக்குள் பிரவேசிப்பேனா? நான் அப்படிச் செய்கிறதில்லை என்று உம்முடைய பேரிலும் உம்முடைய ஆத்துமாவின் பேரிலும் ஆணை யிட்டுச் சொல்லுகிறேன் (11:11).*

*உரியா, தேவனுடைய பெட்டி பற்றிய தமது பயபக்தியையும், படையின் பிரதான தளபதியின் மீது தாம் கொண்டிருந்த அக்கறையையும், எரியூட்டும் பாலை நிலச் சூரியனின் கீழ் தமது சக போர்வீரர்கள் முகாமிட்டிருக்கையில், தாம் தம் இல்லத்தையும் மனைவியையும் மகிழ்வுடன் அனுபவிக்கும்படி செல்லமறுத்ததையும் எடுத்துரைத்த வேளையில் தாவீது எவ்வாறு உணர்வற்றவராக நிலைத்திருந்தார் என்பதை நான் கற்பனையில் காண முடியவில்லை. ஆயினும், தாவீது "என் மனைவியோடே சயனிக்கிறதற்கும், என் வீட்டுக்குள்ளே பிரவேசிப்பேனா? நான் அப்படிச் செய்வதில்லை" என்ற வார்த்தைகளை மாத்திரம் முழுமையாகக் கேட்டார்.*

*தாவீதின் புருவங்களில் வியர்வை சொட்டியதை நான் காண்கின்றேன். அவரது சிந்தனைகளை நான் காதில் கேட்கின்றேன்: "நான் என்ன செய்ய முடியும்?" எனவே அவர் அடுத்த திட்டம் ஒன்றை வகுக்க முடியும்படிக்கு, அவர் உரியாவை எருசலேமிலேயே இன்னும் சில நாட்கள் தங்கும்படி கேட்டுக்கொண்டார். அடுத்த திட்டம் 'போ' என்பதாக மாறிற்று: போதை யில் ஆழ்த்தும் திட்டம். உரியா குடித்து வெறித்திருந்தால், அவர் நிச்சயமாக தமது குறிக்கோள்களை மறந்தவராக, தமது மனைவியுடன் உறங்கு வதற்காகத் தமது இல்லம் நோக்கித் தள்ளாடிச் செல்லுவார் அல்லவா?*

*அன்று இரவில் தாவீது உரியாவைத் தம்முடன் விருந்துண்ண அழைத்தார். அந்த விருந்தானது மகா உன்னதமான தேவனை ஆராதிப் பவருக்கு ஏற்றதாயிருப்பதைக் காட்டிலும், மதுபானத்தின் (ரோமக்) கடவுளான* Bacchus *ஆராதிப்பவருக்கு அதிகம் ஏற்புடையதாக இருந்தது. தாவீது உரியாவை உணவினாலும் மதுபானத்தினாலும் நிரப்பினார். மீண்டும் தாவீது தமது ஊழியக்காரரின் இராஜவிசுவாசத்தை குறைவாக எடைபோட்டார். குடிபோதையில் இருந்த உரியா, தெளிவாயிருந்த தாவீதைக் காட்டிலும் மேன்மையானவராயிருந்தார். உரியா அப்போதும், "தன் வீட்டுக்குப் போகாமல்" (11:13), அரண்மனை வாசல் அருகிலேயே உறங்கினார்.*

*ஒருவர் தம் பாவத்தை மூட முயற்சி செய்கின்றபோது, வெளியேறும் இடம் இருப்பதில்லை. நமது முந்திய பாடத்தில் நாம், "தாவீது ... தன்னு டைய எல்லா ஜனத்திற்கும் நியாயமும் நீதியும் செய்துவந்தான்" என்று குறிப்பிட்டோம் (2 சாமு. 8:15). இப்பொழுது அவரது வாழ்வில் இருந்த பாவத்தின் காரணமாக, இந்த நீதியும் நியாயமும் நிறைந்த நியாயாதிபதி, ஒன்றுமறியாத ஒரு மனிதருக்கு மரண தண்டனையை வழங்கினார். தாவீது உரியாவை யுத்தகளத்திற்குத் திரும்ப அனுப்பினார். அப்போது அவர் உரியாவிடத்திலேயே, யோவாபுக்கு "மும்முரமாய் நடக்கிற போர்முகத்*

திலே நீங்கள் உரியாவை நிறுத்தி, அவன் வெட்டுண்டு சாகும்படிக்கு, அவனை விட்டுப் பின்வாங்குங்கள்" (11:15) என்று எழுதப்பட்ட கடிதம் ஒன்றைக் கொடுத்தனுப்பினார். இந்தச் செய்தியைத் தாவீது "உரியாவின் கையில் கொடுத்து" அனுப்பியது வஞ்சக செயலாயிருக்கிறது (11:14); தாவீது தாம் தண்டனை விதித்த அந்த மனிதர் தாம் எடுத்துச் செல்லும் குறிப்பைப் படித்துப் பார்க்க மாட்டார் என்று நம்பினார். உரியா என்ற அந்த மாண்புமிக்க போர்வீரர் தற்கொலைப் படையில் அனுப்பப்பட்டாலும் கூட கட்டளைக்கு கீழ்ப்படியத் தயங்க மாட்டார் என்று அறிந்த தாவீது உரியாவை அவ்வளவு மதித்ததும் கூட வஞ்சகமாகவே இருக்கின்றது.

தாவீதின்மீது யோவாப் கொண்டிருந்த கேள்விக்கப்பாற்பட்ட பற்றுறுதி மீண்டும் காணப்படுகிறது. அவர் அந்தக் கடிதத்தில் கண்டிருந்த ராஜாவின் விருப்பத்தைச் செயல்படுத்தினார். அவர் உரியாவை முன் அணியில் நிறுத்தி நகரத்தைத் தாக்கினார். அவர்களுடன் போரிட அம்மோனியர்கள் வந்தார்கள், ஆனால் அவர்களை இஸ்ரவேலர்கள் நகரத்தின் வாயில் வரைக்கும் பின் துரத்தினார்கள். அங்கு அவர்கள் அம்மோனியப் போர் வீரர்களின் பளபளக்கும் பட்டயங்களையும் மதில் மீதிருந்த வில்லாளர்கள் எய்த அம்புகளின் மழையையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.[9] "... தாவீதின் சேவகராகிய ஜனத்தில் சிலர் பட்டார்கள்; ஏத்தியனாகிய உரியாவும் செத்தான்" (11:17). தமது பாவத்தை மூட வேண்டும் என்ற தாவீதின் முரட்டுத் துணிச்சலான முயற்சியினால் உரியாவுடன் மற்றவர்களுக்கும் இறந்தார்கள் என்பதைக் கவனியுங்கள். செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பின்படி, மற்ற பதினெட்டு பேர்கள் இறந்தார்கள். ஆக, தாவீதின் காம இச்சை நிறைந்த குணத்தை மறைப்பது தவிர வேறு எவ்வித நோக்கமும் இல்லாது, மொத்தம் பத்தொன்பது குடும்பங்கள் ஒரு மகனை, ஒரு சகோதரனை, ஒரு கணவனை, மற்றும்/ அல்லது ஒரு தந்தையை இழந்து நின்றன.

யோவாப் தம் அறிக்கையைத் தாவீதுக்கு அனுப்பியபோது, அவரது (யோவாபின்) வார்த்தைகளில் கேலியின் சாயல் ஒன்றிருந்தது. செய்தி யாளரிடம் உண்மையில் அவர், "அதிகமான (வீரர்களின்) மரணத்தை விளைவித்த,[10] அற்பமான தீர்மானத்தின் காரணமாக ராஜாஅதிருப்தி அடைந்தவராய் செயல்பட்டால், 'உம்முடைய சேவகனாகிய உரியா என்னு ம் ஏத்தியனும் செத்தான்' என்பதைக் கூடுதலாகச் சொல்வதில் நிச்சயமாயிரு" என்றே கூறினார் (11:20, 21).

செய்தியாளர் தமக்கு யோவாப் கூறியபடியே செய்தார், அவர் "ராஜாவின் சேவகரில் சிலர் செத்தார்கள்; உம்முடைய சேவகனாகிய உரியாவும் செத்தான்" (11:24) என்று கூறி தமது அறிக்கையை முடித்தார்.

தாவீது கூறிய, "நீங்கள் கொஞ்சம் ஜெயிக்கிறீர்கள் - கொஞ்சம் தோற்கிறீர்கள்" என்ற பதிலானது நமது இருதயங்களைப் பிளக்கின்றது. அவர், "நீ யோவாபினிடத்தில் போய், 'இந்தக் காரியத்தைப் பற்றி விசாரப் பட வேண்டாம்; பட்டயம் ஒருவேளை ஒருவனையும், ஒருவேளை வேறொருவனையும் பட்சிக்கும்' " (11:25) என்று மாய்மாலமாகக் கூறிய போது, அவர் எவ்வளவாக நிம்மதியடைந்திருக்க வேண்டும்!

உரியா இறந்து போனார் என்று பத்சேபாள் கேள்விப்பட்டபோது, அவள் தனது கணவருக்காகத் துக்கம் கொண்டாடினாள்.[11] துக்கம் கொண்டாடுதலின் சுருக்கமான காலம் (ஒருவேளை, ஏழு நாட்கள்; ஆதி. 50:10; 1 சாமு. 31:13 ஆகிய வசனங்களைக் காணவும்) முடிந்த பின்பு, தாவீது அவளை அழைத்தனுப்பினார், அவள் அவருக்கு மனைவியானாள் - வளர்ந்து வந்த அவரது அந்தப்புறத்தின் அங்கமானாள். பல மாதங்களுக்குப் பின்பு, பத்சேபாளுக்கு ஆரோக்கியமான ஒரு ஆண் குழந்தை பிறந்தது. தாவீதின் செவிகளில் பாராட்டுரைகள் எதிரொலித்துக் கொண்டிருந்த வேளையில், அவர் தமது (பாவத்தை) மூடுதல் என்ற செயல்பாடு வெற்றி நிறைந்ததாகி விட்டது என்று நினைத்துக் கொண்டு இருந்திருப்பார். எவரொருவரும் அவரது அஜாக்கிரதையான செயலை ஒருபோதும் அறியமாட்டார்கள். எவரொருவரும்? அரண்மனையில் இருந்த ஒவ்வொரு வரும் அதை அறிந்திருந்தார்கள். அவரது வேலைக்காரர்கள் அதை அறிந்திருந்தார்கள். அவரது பிள்ளைகள் அதை அறிந்திருந்தார்கள். யோவாப் அதை அறிந்திருந்தார். மற்றவர்கள்[12] அதை அறிந்திருந்தார்கள். மிக முக்கியமாக, தேவன் அதை அறிந்திருந்தார் - மற்றும் தாவீது அதை அறிந்திருந்தார்.

தேவனுடன் மிக நெருக்கமான ஐக்கியம் கொண்டிருந்ததாக அறியப் பட்ட தாவீது, ஒரு சில நாட்களிலேயே பத்துக் கட்டளைகளின் 40 சதவிகிதத்தை முறித்துப் போட்டிருந்தார்:[13] ‘‘உன் பிறனுடைய மனைவியை யும் ... இச்சியாதிருப்பாயாக’’; ‘‘விபசாரம் செய்யாதிருப்பாயாக”; “பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக”; “கொலை செய்யாதிருப்பாயாக” (யாத். 20:17, 14, 16, 13). தேவனுக்குப் பயந்த தமிழக நீதிபதி ஒருவருக்கு, இந்த வழக்கில் பின்வரும் தீர்ப்பளிக்க இரண்டு நிமிடங்கள் கூடத் தேவைப் படாது: “அவரை வெளியே இழுத்துச் சென்று தூக்கிலிடுங்கள்!’’ [ஆயினும்] தேவனுடைய தீர்ப்பைக் கவனித்துக் கேளுங்கள்: ‘‘இந்த காரியம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருந்தது” (11:27ஆ).

**துன்புறுதல்**

தாவீதின் பாவங்களின் உண்மைகள் தெளிவாக உள்ளன. அந்தப் பாவங்களின் கிளைகள் போன்ற பிரிவுகளைப் பற்றியும் நாம் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது.

தாவீது தமது முன்னோடியான சவுல் ராஜாவைக் காட்டிலும் எவ்வளவு மோசமாகப் பாவம் செய்திருந்தார் என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். அமலேக்கியர்களை முற்றிலுமாகத் துடைத்து ஒழித்துவிடும்படி சவுலுக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது, ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. இந்தப் பாவத்திற்காக அவர் ராஜாவாயிராதபடி தள்ளவிடப்பட்டார் (1 சாமு. 15:1-23). சவுலின் பாவம் தாவீதின் பாவங்களுடைய ஏராளமான தன்மையுடன் ஒப்பாயிருப்பதில்லை என்பதை நம்மில் பலர் நமது கண்ணோக்கிலிருந்து ஒப்புக் கொள்ளுவோம். இங்கு தேவனுடன் நடந்த ஒரு மனிதர் இருந்தார்; இப்போது அவர் பாவத்தில் புரண்டு கொண்டு

இருந்தார், மீறுதல் என்னும் பிச்சில் ஆழம் ஆழமாக மூழ்கிக் கொண்டிருந் தார். சவுலின் பாவத்தினுடைய விளைவுகளை நாம் சிந்தித்துப் பார்க்கும் போது, தாவீதின் பாவங்களினுடைய சாத்தியக் கூறான விளைவுகளை நினைத்துப் பார்க்கவே நாம் திகில் அடைகின்றோம்!

மிக முக்கியமாக, பாவம் தாவீதை ஏறக்குறைய முற்றிலுமாக எப்படி அழித்துப் போட்டது என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் 2 சாமுவேலில் உள்ள விவரங்களை மட்டும் வாசித்தால், இந்தக் கருத்தை நீங்கள் தவறவிட்டு விடுவீர்கள். இழிவுமிக்க இந்த நிகழ்வுகளின் தொடர் வரிசையானது, தேவனுடன் மிக நெருக்கான தொடர்பு கொண்டிருந்த ஒருவரின் இருதயத்திற்கும் ஆத்துமாவிற்கும் என்ன செய்தது என்பதை கற்பனை செய்ய முயற்சியுங்கள். ஆயினும், நாம் கற்பனை செய்ய வேண்டியது இல்லை. சங்கீதம் 32 நமக்குப் பின்வருமாறு கூறுகிறது.[14]

> நான் அடக்கிவைத்தமட்டும், நித்தம் என் கதறுதலினாலே
> என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று.
> இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால்,
> என் சாரம் உஷ்ணகால வறட்சிபோல வறண்டுபோயிற்று
> (வ. 3, 4).

அந்த நாட்களில் நீங்கள் தாவீதைப் பார்த்திருந்தீர்கள் என்றால், அவர் ஒரே மாதிரியாக, ஒருவேளை சற்றே வெளுத்தவராக மற்றும் இளைத்தவராக, ஆனால் இன்னமும் தம் அரியணை மேலிருந்து கொண்டு தம் இராஜரீக கடமைகளை செய்து கொண்டிருப்பவராகவே நீங்கள் அவரைப் பார்த் திருப்பீர்கள். ஆயினும், உள்ளாக அவரைப் பாவமானது பிரித்துக் கிழித்துப் போட்டுக் கொண்டிருந்தது. பாவம் என்பது பயங்கரமான விஷயமாக உள்ளது!

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்த [இந்த] நிகழ்ச்சிகளைப் பற்றிப் புரிந்து கொள்வது என்பது நமக்கு ஏன் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது? ஏனென்றால், தாவீது விழுந்த அதே வலையில் நாமும் விழக்கூடும். ஏனென்றால் நம் வாழ்வு ஒரு கொலைக்களமாகி நம்மை நொறுக்கித் தீருமளவுக்கு நம் வாழ்விலும் பாவம் பெருகக் கூடும். ஏனென்றால், பாவமானது தாவீதைப் பிரித்துக் கிழித்தது போல், அது நம்மையும் பிரித்துக் கிழித்துப் போடக்கூடும். ஏனென்றால், அது நேரிடும்போது நாம் அகப்பட்டுள்ள குளறுபடியில் இருந்து வெளியேறுவது எவ்வாறு என்பதை நாமும் அறிவது அவசியமாக உள்ளது.

## தாவீது தமது வாழ்வைத் திரும்பவும் ஒழுங்குப்படுத்த எதைச் செய்ய வேண்டியதாக இருந்தது (2 சாமுவேல் 12)

மக்கள் தங்கள் வாழ்வைக் குளறுபடியாக்கிக் கொள்ளும் பொழுது,

*அவர்கள் தங்கள் வாழ்வை மீண்டுமாக ஒன்றுகூட்டுவதற்கு அதை நேராக்கி, சரியானவற்றைச் செய்ய வேண்டும் என்று கூறும்படி நாம் சோதிக்கப் படுவதுண்டு. ஆயினும், பெரும்பாலான வேளைகளில், இது அவ்வளவு எளிய செயலாக இருப்பதில்லை. நமது வேதபாடப் பகுதி, தாவீது தம் வாழ்வைக் குளறுபடியாக்கிக் கொண்டபோது அவர் குறைந்தபட்சம் நான்கு விஷயங்களைச் செய்ய வேண்டியிருந்தது என்று அறிவிக்கிறது:*

**அவருக்கு, தம்முடன் முழுமையான நேர்மையாயிருப்பவர் ஒருவர் தேவைப்பட்டார்**

*தாவீது தம்மை சமப்படுத்தக்கூடிய, தம்மை அறிந்திருந்த, தமது இருதயத்தைத் தொடும் வகையில் தம்மை அணுகுவது எப்படி என்று அறிந்து இருந்த ஒரு நண்பரைக் கொண்டிருந்த விஷயத்தில் ஆசீர்வதிக்கப் பட்டிருந்தார். தீர்க்கதரிசியான நாத்தான்[15] என்பவரே அந்த நண்பரா யிருந்தார்.*

*தேவன் நாத்தானைத் தாவீதிடம் அனுப்பினார். நாத்தான் தாவீது தம் இருதயத்தைக் காண்பதற்கு உவமையின் வடிவில் ஒரு கண்ணாடியைப் பிடித்திருந்தார்:*

> *ஒரு பட்டணத்தில் இரண்டு மனுஷர் இருந்தார்கள்,*
> *ஒருவன் ஐசுவரியவான், மற்றவன் தரித்திரன்.*
> *ஐசுவரியவானுக்கு ஆடுமாடுகள் வெகு திரளாயிருந்தது.*
> *தரித்திரனுக்கோ தான் கொண்டு வளர்த்த ஒரே ஒரு சின்ன*
> *ஆட்டுக்குட்டியைத் தவிர வேறொன்றும் இல்லாதிருந்தது.*
> *அது அவனோடும் அவன் பிள்ளைகளோடுங்கூட இருந்து வளர்ந்து,*
> *அவன் வாயின் அப்பத்தைத் தின்று, அவன் பாத்திரத்திலே குடித்து,*
> *அவனுக்கு ஒரு மகளைப்போல இருந்தது (12:1-3).*

*(அந்த ஆட்டுக்குட்டி பிள்ளைகளோடு விளையாடுவதையும், அவர்களின் உணவு மேசையில் இருந்த பாத்திரங்களில் இருந்து குடிப்பதையும், அவர்களின் படுக்கைகளின் கால் பக்கத்தில் படுத்திருப்பதையும் நான் காண முடிகின்றது.)*

> *அந்த ஐசுவரியவானிடத்தில் வழிப்போக்கன் ஒருவன் வந்தான்;*
> *அவன் தன்னிடத்தில் வந்த வழிப்போக்கனுக்குச் சமையல் பண்ணுவிக்க*
> *தன்னுடைய ஆடுமாடுகளில் ஒன்றைப் பிடிக்க மனதில்லாமல்,*
> *அந்தத் தரித்திரனுடைய ஆட்டுக் குட்டியைப் பிடித்து,*
> *அதைத் தன்னிடத்தில் வந்த மனுஷனுக்குச் சமையல் பண்ணுவித்தான் (12:4).*

*நியாயம் பற்றிய தாவீதின் கருத்துணர்வு இன்னும் கூர்மையாகவே இருந்தது என்பது அவருக்கு பாராட்டுச் செலுத்த வேண்டிய விஷயமாக இருந்தது. அவர் கடுங்கோபம் கொண்டார்.*

*அப்பொழுது தாவீது: அந்த மனுஷன்மேல்[16] மிகவும் கோபமூண்டவனாகி, நாத்தானைப் பார்த்து: "இந்தக் காரியத்தைச் செய்த மனுஷன் மரணத்திற்குப் பாத்திரன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன். அவன் இரக்கமற்றவனாயிருந்து,[17] இந்தக் காரியத்தைச் செய்தபடியினால் அந்த ஆட்டுக்குட்டிக்காக நாலத்தனையாகத்[18] திரும்பச் செலுத்த வேண்டும்" என்றான் (12:5, 6).*

*பின்பு நாத்தான் அழிவுமிக்க அந்த வார்த்தைகளைப் பேசினார்: "நீயே அந்த மனுஷன்!" (12:7அ).*

*வேதாகமத்தில் நடந்த நிகழ்வுகள் எவ்வாறு நடைபெற்றன என்று நாம் காண்பதற்காக, அவைகள் எப்படி நடந்ததென்று அப்படியே அவை நடந்தபோதே வீடியோ காட்சிச் சுருள்களில் பதிவு செய்து வைத்திருந்தால் எவ்வளவு அற்புதமாயிருந்திருக்கும்? ஒருவேளை, தாவீதுக்கு முன் நின்றிருந்த நாத்தான், பளிச்சிடும் தீர்க்கதரிசனக் கண்களுடன், தமது விரலை நீட்டி, குற்றஞ்சாட்டும் குரலில் "நீயே அந்த மனுஷன்!" என்று கூறியிருப்பார். இருப்பினும் நான், நாத்தானை தாவீதின் கோபத்திற்குப்பின் இருதயம் உடைந்துபோன நண்பராக, கண்ணீர் நிறைந்த கண்களுடனும் கலங்கித் தடுமாறும் குரலுடனும், "நீயே அந்த மனுஷன்! தாவீதே நான் உம்மைப் பற்றித்தான் பேசுகின்றேன். உம்மிடத்தில் ஏராளமாயிருந்தன, உரியாவிடத்திலோ மிகவும் கொஞ்சம்தான் இருந்தது - அவர் வைத்திருந்ததை(யும்) நீர் எடுத்துக் கொண்டீர், அவருடைய மனைவியையும் அவருடைய உயிரையும் கூட நீர் எடுத்துக் கொண்டீர்" என்று கூறுபவராக நினைத்துப் பார்க்கவே பெரிதும் விரும்புகின்றேன்.*

*இருப்பினும் நாத்தான் அதைச் செய்தார், அது தாவீதின் இருதயத்தில் இருந்த நன்றியின்மையை வெளிப்படுத்திய நாணயமான ஒரு செய்தியாக இருந்தது:*

*... இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், "நான் உன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணி, உன்னைச் சவுலின் கைக்குத் தப்புவித்து, உன் ஆண்டவனுடைய வீட்டை உனக்குக் கொடுத்து, உன் ஆண்டவனுடைய ஸ்திரீகளையும் உன் மடியிலே தந்து, இஸ்ரவேல் வம்சத்தையும், யூதா வம்சத்தையும் உனக்குக் கையளித்தேன்; இது போதாதிருந்தால், இன்னும் உனக்கு வேண்டியதைத் தருவேன். கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான இந்தக் காரியத்தைச் செய்து, அவருடைய வார்த்தையை நீ அசட்டை பண்ணினது என்ன? ..." (12:7-9).*

*தேவன் தாவீதுக்கு எல்லாவற்றையும் கொடுத்திருந்தார், அவருக்கு தேவைப்பட்டிருந்தால், இன்னும் அதிகமானவற்றையும் கொடுத்திருப்பார். ஆயினும் தாவீது தேவனுடைய அளிப்புகளுடன் திருப்தியடையாமல் இன்னொருவருடைய மனைவியை களவு செய்தார். இது ஒரு கடினமான செய்தியாயிருந்தது, ஆனால் இது உண்மையாயிருந்தது. இதுவே தாவீதுக்கு அவசியமானதாயிருந்தது.*

இன்றைய நாட்களின் மத உலகில், நீங்கள் விரும்புகின்ற எந்த வகையான பிரசங்கத்தையும் நீங்கள் கண்டறிய முடியும். உங்கள் வாழ்வில் எல்லாம் நேர்த்தியாக உள்ளது என்று கூறும் பிரசங்கத்தை நீங்கள் விரும்பினால், அதை உங்களால் பெற்றுக் கொள்ள முடியும்; ஆனால் உங்கள் பாவத்தினால் உங்கள் வாழ்வு ஒரு குளறுபடியில் இருக்கின்றபோது, உங்களுக்குத் தேவைப்படுவது உங்கள் நரம்புகளை (உணர்வுகளை) இதப்படுத்தும் செய்தியல்ல. ஒருவேளை நாத்தான் வந்து, தாவீதின் தோளைச் சுற்றித் தம் கைகளைப் போட்டு - அவரது பாவத்தை வெளிப் படுத்தாமல் - "நீ துன்புற்றிருக்கின்றாய், நானும் கூடத் துன்புற்றிருக் கின்றேன்" என்று மட்டும் கூறியிருந்தால் எப்படியிருந்திருக்கும்? தாவீதின் வாழ்வின் அந்த வேளையில் அவருக்குத் தேவைப்பட்டது அதுவல்ல, அது உங்களுக்கும் தேவைப்படுவதில்லை. உங்கள் வாழ்வில் உள்ள பாவத்தைக் குறித்து உங்களிடம் நேர்மையாயிருப்பவரே - அன்புகூரும் வகையில், நேர்மையாக, ஆனால் முற்றிலும் நேர்மையாக இருப்பவரே - உங்களுக்குத் தேவை.

சில வட்டாரங்களில் இது நயப்பாங்குடையதாக இராதிருக்கலாம், ஆனால் நான் பாவத்தை எதிர்ப்பவனாயிருக்கின்றேன். பாவம் என்பது ஒரு விரோதியாக உள்ளது. இது பழைய பாணியில் இருக்கலாம் ஆனால் நான், மதுபானம் பண்ணுதல், போதைப் பொருட்களைத் தவறாகப் பயன் படுத்துதல், நடனம், சூதாட்டம், கருக்கலைப்பு, தன்னடக்கமற்ற உடை, வேதவசனத்தின்படியல்லாத விவாகரத்து, பொருள்முதல்வாதம், பாலுறவில் தூய்மையின்மை, திருமண வாழ்வில் உண்மையில்லாமை, உபதேசப்பிழை, மற்றும் இவை போன்றவற்றிற்கு எதிராகப் பிரசங்கிக் கின்றேன். நான் இந்தத் தலைப்புகளில் மாத்திரம் பிரசங்கித்துக் கொண்டிருப்பதில்லை, ஏனெனில் வேதாகமத்தில் ஆயிரத்தோரு வலிவார்ந்த தலைப்புகள் உள்ளன. இதற்கு மறுபுறத்தில், இப்படிப்பட்ட விஷயங்களைக் குறித்து எனக்கு உறுதிப்பாடு உண்டு, நான் எனது உறுதிப் பாட்டை மறைப்பதில்லை.

"நான் அதை விரும்புவதில்லை, நான் கண்டனம் பண்ணப்படுவதை விரும்புவதில்லை. நான் இனிமையையும் மென்மையையும் மாத்திரம் விரும்புகின்றேன்" என்பது உங்கள் பதிலாயிருக்கலாம். நான் மீண்டும் கூற அனுமதியுங்கள்: உங்கள் வாழ்வு குளறுபடியில் உள்ளபோது, உங்களிடத் தில் முற்றிலும் நேர்மையுடன் இருக்கும் ஒருவரே உங்களுக்கு முதலில் தேவை.

### அவருக்கு, உடைக்கப்படக்கூடிய இருதயம் ஒன்று தேவைப்பட்டது

ஆயினும், தாவீதுக்கு இன்னும் அதிகமானவை தேவைப்பட்டது. நேர்மையான செய்தி சரியான வழியில் பெற்றுக் கொள்ளப்படாத வரையில் நன்மை எதையும் செய்யாது. தாவீதுக்கு உடைக்கப்படக் கூடிய இருதயம் ஒன்றும் தேவைப்பட்டது.

நாத்தானின் செய்திக்குத் தாவீது பல வழிமுறைகளில் பதில்செயல் செய்திருக்கலாம். அவர் பிரசங்கியார் மீது கோபமாகியிருக்க முடியும். அது

*ஒன்றும் வழக்கத்திற்கு மாறான பதில்செயல் அல்ல. அவர் சாக்குபோக்கு சொல்லத் தொடங்கியிருக்கலாம்: "இது பத்சேபாள் குளிக்கத் தேர்வு செய்த இடத்தில் அவள் செய்த தவறு" என்றோ அல்லது "உரியா அவ்வளவு பிடிவாதக்காரனாயிராதிருந்தால், இன்று அவன் உயிரோடிருந்திருப்பான்" என்றோ அவர் கூறியிருக்கலாம். நாம் ஒரு குளறுபடியான நிலையில் இருக்கையில் அதற்கு மற்றவர்களைக் குற்றம் சாட்டுவது மிகவும் சுலபம் அல்லவா? ஆயினும் சாக்குப்போக்குகள், குளறுபடிக்குள் இருந்த தாவீதின் வாழ்வைச் சரிப்படுத்தி விடாது. அவர் - இன்னொரு பாவத்தைக் கூட்டு வதன் மூலம் - தமது பாவங்களைத் தொடர்ந்து மூட முடிவு செய்திருக் கலாம். அவர் கிழக்கத்திய முடியரசரின் முற்றான வல்லமையை மீண்டும் பயன்படுத்தி நாத்தானைக் கொலை செய்வித்திருக்கலாம்.*

*தாவீது இந்த வழிமுறை எதிலும் பதில்செயல் செய்யவில்லை. அதற்குப் பதிலாக, அவர் இருதயம் உடைக்கப்பட்டதாயிருந்தது. தாவீது பூரணப்பட்டவராயிருந்த காரணத்தினாலின்றி, அவர் தொடப்படக்கூடிய இருதயம் கொண்டிருந்தார் என்ற காரணத்தினாலேயே அவர் தேவனு டைய இருதயத்திற்கு ஏற்ற மனிதராயிருந்தார். தாவீது நாத்தானுக்குப் பதில் அளித்ததை, 2 சாமுவேல் 12:13ஐ ஆழ்ந்து சிந்தியுங்கள்: "நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன்." தவறு பற்றிய இந்த எளிய அறிக்கை, சங்கீதம் 51ல் விரிவாக்கப்பட்டுள்ளது. இந்த சங்கீதத்தின் பழங்காலத் தலைப்பு, "பத்சேபாளிடத்தில் தாவீது பாவத்திற்குட்பட்ட பின்பு நாத்தான் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவன் பாவத்தை உணர்த்தினபோது பாடப்பட்ட தாவீதின் சங்கீதம்" என்று வாசிக்கப்படுகின்றது.*

*தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும்,*
*உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க*
*என்னைச் சுத்திகரியும்.*
*என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி,*
*என் பாவமற என்னைச் சுத்திகரியும்.*
*என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்;*
*என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது ...*

*என் பாவங்களைப் பாராதபடிக்கு*
*நீர் உமது முகத்தை மறைத்து,*
*என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும்.*

*தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்,*
*நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.*
*உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும்,*
*உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து*
*எடுத்துக் கொள்ளாமலும் இரும்.*
*உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத்*
*திரும்பவும் எனக்குத் தந்து,*
*உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்*
*(51:1-3, 9-12).*

*நாம் ஒவ்வொருவரும், "நான் இவ்வகையான இருதயத்தைக் கொண்டுள்ளேனா?" என்று கேட்டுக் கொள்ள வேண்டியது அவசிய மாயிருக்கின்றது. நமது வாழ்வு ஒழுங்கற்ற நிலைகளில் இருக்கும் பொழுது நமக்குத் தேவைப்படுபவற்றில், இதை வேறெவரும் நமக்குத் தர இயலாது. அது (இவ்வகையான இருதயம்) நமக்கு இருக்கிறது அல்லது இல்லை. அது இல்லையென்றால் மற்றும் அப்படிப்பட்ட இருதயத்தை வளர்த்துக் கொள்ள விருப்பம் இல்லையென்றால், மன்னிக்கப்படுவதற்கான நம்பிக்கை வெகு கொஞ்சமே உள்ளது.*

***மன்னிக்கப்படுதலின் உறுதியானது அவருக்குத் தேவையாயிருந்தது***

*மூன்றாவதாக, தாவீதுக்கு மன்னிக்கப்படுதலின் உறுதி தேவையா யிருந்தது. அவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்பது நிச்சய மில்லாமல், அவரால் தொடர்ந்து செயல்பட முடியாமல் இருந்தது. சங்கீதம் 51:11ஐ மீண்டும் கவனியுங்கள்: "உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும்." சவுலிடமிருந்து தேவனுடைய ஆவி நீக்கப்பட்ட போது (1 சாமு. 16:14 முதல்) என்ன நடந்திருந்தது என்பதைத் தாவீது கண்டிருந்தார். சவுல் தமது சிந்தை கலங்கியவராயிருந்தார். அரசருக்கு மனநிம்மதியைக் கொடுப்பதற்காகத் தாவீது ஒவ்வொரு இரவிலும் சவுலுக்காகத் தமது சுரமண்டலத்தை வாசித்தார். இப்போது தாவீது, "அது எனக்கு நேரிட்டுவிட அனுமதியாதேயும்!" என்று கதறினார்.*

*அது நேரிடவில்லை. தேவன் தாவீதுக்கு மன்னிப்பின் உறுதிப் பாட்டைக் கொடுத்தார். தாவீது, "நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தேன்" என்று கூறிய பின்பு, நாத்தான் அவரிடத்தில், "நீ சாகாதபடிக்கு, கர்த்தர் உன் பாவம் நீங்கச் செய்தார்"[19] (2 சாமு. 12:13) என்று கூறினார். அந்த வார்த்தைகளைத் தீர்க்கதரிசி பேசியபோது, தாவீதின் இருதயத் திலிருந்து ஒரு பாரம் எடுத்துப்போடப்பட்டது. அந்த கணத்தில் அவரது மகிழ்ச்சி பற்றி சங்கீதம் 32 கூறுகின்றது:*

> *எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ,*
> *எவனுடைய பாவம் மூடப்பட்டதோ,*
> *அவன் பாக்கியவான்.*
> *எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ,*
> *எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ*
> *அவன் பாக்கியவான்.*
>
> *... நான் என் அக்கிரமத்தை மறைக்காமல்,*
> *என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்;*
> *"என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன்" என்றேன்,*
> *தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்*
> *(32:1, 2, 5).*

*அதைப் பெறுவதற்குத் தாவீது தகுதியற்றவராயிருந்தார், ஆனால்*

*தேவன் தமது எல்லையற்ற கிருபையினால் அவரை மன்னித்தார். தாவீது உடைக்கப்படக் கூடிய இருதயம் கொண்டிருந்தார்; தாவீது மனம் திரும்பி, மீண்டும் தேவனிடத்தில் திரும்பியதால் தேவன் அவரை மன்னித்தார்.*

*இவ்விடத்தில்தான் சவுலுக்கும் தாவீதுக்கும் வித்தியாசம் உள்ளது. நமது கண்ணோட்டத்தின்படி, சவுலின் பாவம் தாவீதின் பாவத்தைப் போல் அவ்வளவு கனமுள்ளதாக இருந்ததில்லை. இருப்பினும் சவுல் தேவனை நோக்கிக் கவனம் செலுத்தக் கூடிய இருதயத்தைப் பெற்றிருந்ததில்லை. சவுல், அரசியல், அனுகூலமான சூழ்நிலை, ஒரு அரசவம்சத்தை நிலை நாட்டுதல், கனம் மற்றும் மகிமை ஆகியவற்றைப் பற்றியே அக்கறை கொண்டிருந்தார். சவுல் தேவனுடைய தீர்க்கதரிசியால் கடிந்து கொள்ளப் பட்ட போது, தேவன் என்ன நினைத்தார் என்பதைக்காட்டிலும், மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றியே அவர் அதிகம் அக்கறை உடையவராயிருந்தார். தாவீது மிகவும் துன்பம் தரத்தக்க வகையில் பாவம் செய்திருந்தாலும், அவர் தம் மையப்பகுதியில், தேவனைக் குறித்தும் அவருடன் தமக்குள்ள உறவு குறித்தும் அக்கறை கொண்டிருந்தார். அவர் தேவனுடைய தீர்க்கதரிசியினால் கடிந்து கொள்ளப்பட்டபோது, அந்த உறவுமுறையை மீளக்கட்டி எழுப்புவது ஒன்றுதான், பொருட்படுத்தப் பட்டதாக இருந்தது. அவர்களின் இருதயங்களில் இருந்த மாறுபட்ட தன்மைகளினால், சவுல் மன்னிப்பின் உறுதிப்பாட்டைப் பெறாதிருந்தார், ஆனால் தாவீது அதைப் பெற்றுக் கொண்டார்.*

*பாவத்தின் காரணமாக நமது வாழ்வு கட்டுப்பாட்டை இழந்து நிற்கும்போது, நாம் தேவனிடமாய்த் திரும்பினால், அவர் நம்மை மன்னிக்கக் கூடும், மன்னிப்பார் என்ற உறுதிப்பாட்டைக் காட்டிலும் அதிகமான வேறெதுவும் நமக்குத் தேவைப்படுவதில்லை. அது நமக்கு நம்பிக்கையையும் பலத்தையும் தருகின்றது. தேவன் இவ்வளவு இரக்கமுள்ளவராயிருப்பார் என்பதை நம்புவது சிலருக்குக் கடினமானதாயிருக்கலாம். உங்களையே நீங்கள் பின்வருமாறு கேட்டுக் கொள்ளுங்கள்: "என் வாழ்வு - பொருளாசை, விபச்சாரம், பொய் மற்றும் கொலை ஆகியவற்றால் சீரழிக்கப்பட்ட - தாவீதின் வாழ்வைக் காட்டிலும் மோசமான வடிவில் இருக்கின்றதா?" இதை நம்புங்கள்: தேவன் தாவீதை மன்னிக்க முடியும் என்றால், அவர் எவரொருவரையும் மன்னிக்க முடியும். அவர் உங்களையும் மன்னிக்க முடியும்.*

*இதை நான் பழைய ஏற்பாட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் முடிவு செய்துள்ளதாகச் சிலர் மறுப்புத் தெரிவித்தால், அவர்களுக்கு நான் பின்வருவதை எடுத்துரைக்கின்றேன். ரோமர் 4:7, 8ஐ கவனியுங்கள்: "எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள். எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான்." இந்த வார்த்தைகள் பழக்கப்பட்டவை போல் ஒலிக்கின்றனவா? அவை அப்படித் தான் இருக்க வேண்டும். இப்போதுதான் நாம் அவற்றை சங்கீதம் 32ல் வாசித்தோமே.[20] பழைய ஏற்பாட்டில் தாவீது, "நாம் தேவனிடத்திற்குத் திரும்பினால், அவர் நம்மை மன்னிப்பார் என்று நான் அறிந்துள்ளேன். அது*

*எனக்கு நேரிட்டது!" என்று கூறினார். புதிய ஏற்பாட்டில் பவுல், "இது இன்னமும் உண்மையாக இருக்கின்றது, தேவனே உமக்கு நன்றி!" என்று கூறினார்.*

*முன்னதாக நான் ஒரு நாணயத்தின் ஒருபுறத்தை முன் வைத்தேன்: ஒவ்வொருவருக்கும், அவரின் ஆவிக்குரிய நிலைபற்றி, அவரிடம் முற்றிலும் நேர்மையாக நடந்து கொள்ளும் ஒருவர் தேவை. இப்பொழுது நான் அந்த நாணயத்தின் மறுபுறத்தை முன் வைக்கின்றேன்: ஒவ்வொருவரும் தாம் மனந்திரும்பி மாறுகின்றபோது மன்னிக்கப்படுகிறார் என்பதையும் அறிவது அவசியம். உபதேச மற்றும் ஒழுக்க விஷயங்களில் சரியானது மற்றும் தவறானது எது என்பது பற்றிய உறுதிப்பாடுகளில் பலமாய் விளங்கும் சபைக்குப் பிரசங்கிக்கக் கூடிய பாக்கியத்தை எனது பல ஆண்டுகள் ஊழிய வாழ்வில் நான் பெற்றுள்ளேன். அதே சபைகள் தேவனுடைய கிருபை மற்றும் இரக்கம் ஆகியவற்றில் விசுவாசம் கொண்டிருந்ததையும் கூறுவது எனக்கு மெய்சிலிர்க்கச் செய்யும் அனுபவமாயிருக்கின்றது; அவர்கள், மக்கள் தங்கள் பாவங்களை ஒப்புக் கொண்டு கர்த்தரிடத்தில் திரும்பும் போது அவர்கள் மீது அன்புகூர்ந்து அவர்களை மன்னித்தார்கள். மனஸ்தாபப்படுபவர்களின் கண்ணீரும் அவர்களைத் திரும்பி ஏற்றுக் கொள்பவர்களின் கண்ணீரும் ஒன்று கலப்பதை நான் எவ்வளவு அடிக்கடி கண்டிருக்கின்றேன்!*

*பாவத்திற்கு எதிராக ஒரு பலத்த நிலைப்பாட்டை மேற்கொண்டு, கடினப் போக்குடையவர்கள், அன்பற்றவர்கள் மற்றும் நியாயந்தீர்க்கும் குணமுடையவர்கள் என்று பெயர்பெற்று, தங்களின் பூரணத் தன்மையைச் சீரழித்து விடும் என்பதற்காக பாவியைத் தங்கள் மத்தியில் ஏற்றுக் கொள்ள மனவிருப்பம் இல்லாதிருத்தல் என்பது சபைக்கு மிகவும் சுலபமானதாக உள்ளது. நான் போதித்துள்ள உள்ளூர் சபைகள் பாவிகளால் நிறைந்திருந்தன[21] என்று நீங்கள் அறிவது உங்களுக்கு அதிர்ச்சி ஏற்படுத்தாது என்று நான் நம்புகின்றேன். சிலர் இந்தப் பாவத்துடனும், வேறு சிலர் அந்தப் பாவத்துடனும் போராடிக் கொண்டுள்ளார்கள் (யாக். 1:14) - ஆனால் நாம் அனைவருமே பாவத்துடன் போராடிக் கொண்டிருக்கின்றோம் (ரோமர் 3:23). தேவன் கூறியவற்றை அப்படியே மிகச் சரியாகச் செய்ய வேண்டும் - வேறு எவ்வழியையும் தேவன் விரும்புவதில்லை (மத். 7:21) - என்று நாம் ஒவ்வொரு மனிதருக்கும் அறைகூவல் விடுத்துக் கொண்டிருக்கின்றோம், ஆனால் அதே வேளையில், நாம் நமது பூரணமற்ற தன்மைகளையும் ஒப்புக் கொள்ளுகின்றவர்களாயிருக்கின்றோம். நாம் பாவம் செய்யும்போது, அவற்றிலிருந்து மனந்திரும்பி, நமது பாவங்களை அறிக்கையிட்டு, தேவனிடத்தில் மன்னிப்பைக் கேட்கின்றோம் (அப். 8:22; 1 யோவா. 1:9; யாக். 5:16), அவர் அந்த மன்னிப்பை நமக்குக் கொடுக்கின்றார் என்று நாம் விசுவாசிக்கின்றோம். உடன் போராடுபவர்கள் என்ற முறையில் நாம் ஒருவர் பிறரைத் தூக்கிவிட, ஒருவர் பிறரை ஆறுதல்படுத்த, ஒருவர் பிறரைப் பெலப்படுத்த முயற்சி செய்கின்றோம்.*

**செயல்படுவதற்கு அவருக்குத் தொடர்ந்து பெலம் தேவைப்பட்டது**

*நீங்கள் மன்னிக்கப்படுகின்ற போது, விஷயம் அத்துடன் முடிந்து விடுகின்றது, அத்துடன் பாவம் ஒருக்காலும் நடந்திராதது போல் இருக்கும் என்பதை உங்களுக்குக் கூறமுடிந்தால் நன்றாயிருக்கும் என்று நான் விரும்பு கின்றேன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, விஷயம் அப்படியிருப்பதில்லை. உங்கள் பாவம் ஒரு கணத்தில் உங்களுக்கு மன்னிக்கப்பட்டு விடலாம், ஆனால் [பாவத்தினால் விளைந்த] குளறுபடியைச் சிக்கறுக்கப் பல ஆண்டுகள் [கூட] ஆகலாம். நாம், "உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும்" (எண். 32:23) என்றும், "மனுஷன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான்" (கலா. 6:7) என்றும் வாசிக்கின்றோம். உரியாவின் மீது பட்டயத்தைப் பிரயோகிக்கத் தாவீது காரணமாயிருந்தார்; இப்போது அவர், தாம் விதைத்திருந்ததை அறுக்க வேண்டியதாயிற்று (இந்த சத்தியம் அடுத்த பாடத்தில் விரித்துரைக்கப்படும்). அவரிடத்தில் நாத்தான் பின்வருமாறு கூறினார்:*

> *… ஏத்தியனாகிய உரியாவை நீ பட்டயத்தால் மடிவித்து, அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டு, அவனை அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே கொன்று போட்டாய். இப்போதும் நீ என்னை அசட்டை பண்ணி, ஏத்தியனாகிய உரியாவின் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக் கொண்டபடியினால், பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும் (12:9, 10).*

*அடுத்த சில வசனங்கள் தாவீதின் வாழ்வின் கடைசி இருபது ஆண்டுகளை வரைக்குறிப்பிடுகின்றன:*

> *கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், "இதோ, நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழும்பப்பண்ணி, உன் கண்கள் பார்க்க, உன் ஸ்திரீகளை எடுத்து, உனக்கு அடுத்தவனுக்குக் கொடுப்பேன்; அவன் இந்தச் சூரியனுடைய வெளிச்சத்திலே உன் ஸ்திரீகளோடே சயனிப்பான். நீ ஒளிப்பிடத்தில் அதைச் செய்தாய்; நானோ இந்தக் காரியத்தை இஸ்ரவேலர் எல்லாருக்கு முன்பாகவும், சூரியனுக்கு முன்பாகவும் செய்விப்பேன் … இந்தக் காரியத்தினாலே கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்க நீ காரணமாயிருந்தபடியினால், உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாய்ச் சாகும்" (12:11-14).*

*தாவீதின் செல்வக்குழந்தை வியாதிப்பட்டு மரித்த வேளையில், இந்தப் பயங்கரமான தீர்க்கதரிசனங்களில், கடைசியாகக் கூறப்பட்ட விஷய மானது உடனடியாக உண்மையாயிற்று ("தாவீதின் குழந்தை இறந்தபோது" என்ற துணைப்பாடத்தைக் காணவும்). நமது அடுத்த பாடம், தாவீதின் சொந்த வீட்டாரிலிருந்து எழுந்த "தீமையை" மையங்கொண்டிருக்கும்: தாவீது தமது பிள்ளைகளிடத்தில் மரியாதையை இழந்தார்; தாவீதின் மகள் தாமார், அவரது மகன் அம்னோனால் கற்பழிக்கப்பட்டாள்; அம்னோன் (தாவீதின்) இன்னொரு மகனான அப்சலோமினால் கொலை செய்யப் பட்டான்; அப்சலோம் தனது தந்தைக்கு எதிராகக் கலகம் செய்தான்;*

*அப்சலோம் கொல்லப்பட்டான். அப்சலோமின் கலகத்தில், தாவீதுக்கு "அடுத்தவன்" தாவீதின் பெண்களுடன் சயனிப்பான் என்ற முன்னுரைத்தல் உண்மையான விஷயமாயிற்று (இ.வ. 2 சாமு. 16:22). இந்தப் பாடத் தொடரில் நமது கடைசிப் பாடத்தின்போது, பட்டயம் மீண்டும் மீண்டும் பளிச்சிட்டது எவ்வாறு என்று நாம் காண்போம்.*

*மீண்டும் நான் இதைக் கூற அனுமதியுங்கள்: பாவம் பயங்கரமானதாக உள்ளது! அது மன்னிக்கப்பட்டபோது கூட, அதன் கடுமையான விளைவுகள் உயிருடன் இருக்கின்றன! நமது செல்வாக்கு சேதப்படுத்தப் படுகின்றது. ஒன்றும் அறியாத மக்கள் புண்படுத்தப்படுகின்றார்கள். பட்டயம், கண்டபடி வெட்டி, காயங்கள் பல ஆண்டுகளுக்கு இருக்க முடியும். நமது இளைஞர்களுக்கு, "பாவத்திலிருந்து விலகி நில்லுங்கள். உங்கள் இளம் வயதிற்குரிய ஆர்வமானது உங்களைப் பாவத்திற்கு வழி நடத்தும்படி அனுமதிக்காதீர்கள். சோதனையைத் தவிர்த்து விடுங்கள்" என்று நாம் [அறிவுரை] கூறுவதில் வியப்பு எதுவும் இல்லை. [பாவத்தின்] விளைவுகள் பயங்கரமானவைகளாய் உள்ளன!*

*தாவீதுக்கு உடனடியான மன்னிப்பு தேவைப்பட்டது. அவர் இருளான ஒவ்வொரு நாளிலும் உயிர்பிழைத்திருப்பதற்குத் தொடர்ந்து பலமும் தேவைப்பட்டது.*

*தாவீது எப்படி உயிர்பிழைத்திருந்தார்? அவருக்கு அளிக்கப்பட்ட மன்னிப்பின் நிச்சயத்தன்மை உதவிற்று (சங். 32:1, 2). நாத்தானால் அவருக்கு அளிக்கப்பட்டிருந்த உறுதிப்பாட்டுடன் கூடுதலாக, இந்த அத்தியாயத்தின் எஞ்சிய பகுதியில் கர்த்தர் தங்களின் [கர்த்தருக்கும் தாவீதுக்கும் இடையில் உள்ள] உறவுமுறை மீண்டும் கட்டியெழுப்பப்பட்டிருந்தமைக்கு உறுதியான ஆதாரத்தை/நிரூபணத்தைக் கொடுத்தார்: தாவீது - பத்சேபாள் ஆகியோரின் முதல் குழந்தை இறந்த பின்பு, தேவன் அவர்களுக்கு இன்னொரு குழந்தையைக் கொடுத்தார். அவர்கள் அந்தக் குழந்தைக்கு "சமாதானம் நிறைந்தவன்" என்று அர்த்தப்படுகின்ற, சாலொமோன் என்று பெயரிட்டார்கள்; நாத்தான் அந்தக் குழந்தைக்கு "யெதிதியா" என்று பெயரிட்டார், இது "தாவீது" என்று பெயர் வரும் அதே மூலவார்த்தை யிலிருந்து வருவதாகவும் "கர்த்தருக்கு மிகவும் அன்பார்ந்த" என்று அர்த்தம் கொள்வதாகவும் இருந்தது. [இம்முறை நாத்தான் நற்செய்தியுடன் வந்தார்.] இந்த அத்தியாயத்தின் முடிவில் இன்னொரு நிரூபணம் தரப்பட்டது: ரப்பா நகரத்தைக் கைப்பற்றியதின் மூலம் தாவீதின் யுத்தங்களின் வெற்றிகரமான முடிவு சைகைப்படுத்தப்பட்டது. தாவீதுக்கு, தேவனுடனான அவரது உறவு மீளக்கட்டியெழுப்பப்படுதல் என்பது வேறு எதைக்காட்டிலும் அதிக அர்த்தம் நிறைந்ததாக இருந்தது. அது அவருக்கு உறுதிப்படுத்தப்பட்ட பின்பு அவர் தொடர்ந்து செயல்பட முடிந்தது.*

*இந்த உறுதிப்பாட்டுடன், எதிர்காலத்தில் தேவன் தம்மைப் பெலப் படுத்தித் தமக்கு உதவுவார் என்ற தாவீதின் உறுதிப்பாடும் பிணைந்திருந்தது. "நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர்; என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக் காத்து ..." (சங். 32:7) என்று தாவீது கர்த்தரிடம் கூறினார்.*

*தாவீதுக்கு உதவி, அவரைத் தாங்கி நின்ற நண்பர்களின் பிரசன்னம்*

அவருக்கு உதவிய இன்னொரு விஷயமாயிருந்தது. நாத்தான் தாவீதின் அருகில் இருந்து அவரைத் தாங்கி நின்றார் (2 சாமு. 12:25; 1 இரா. 1:8 முதல்), மற்றும் தாவீது பிற நண்பர்களையும் கொண்டிருந்தார் - சாதோக் (2 சாமு. 15:24), ஊசாய் (இவர் 2 சாமு. 15:37ல் தாவீதின் சிநேகிதன் என்று கூறப் படுகின்றார்), மற்றும் மாகீர் (2 சாமு. 17:27; இவர்தான் மேவிபோசேத் துக்குத் தங்குமிடம் கொடுத்திருந்தவர்) ஆகியோர் இந்த நண்பர்களில் இருந்தார்கள். இந்த நண்பர்கள் தாவீதுக்கு அவரது மோசமான நாட்களில் உதவியாக இருந்தார்கள்.

தேவன் நமக்கு உதவி செய்யவும் இதே விதமான வழிகளை அளிக்கின்றார். நாம் மனந்திரும்பி தேவனுடைய சித்தத்தைச் செய்தால், நமக்கும் மன்னிப்பு வாக்களிக்கப்படுகின்றது (அப். 2:38; 1 யோவா. 1:9). மேலும் தேவன் நம்மோடு தொடர்ந்து இருப்பதாக வாக்குத்தத்தம் செய்துள்ளார். "கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான்?" (எபி. 13:6). கடைசியாக, தேவன் நமக்கு ஆதரிக்கும் குழு ஒன்றை அருளியிருக்கின்றார், இது சபை என்று அழைக்கப் படும் மக்கள் அமைப்பாக (சரீரமாக) உள்ளது. நாம் யாவரும் கர்த்தருடைய சபையின் அங்கமாயிருப்பது அவசியமாக உள்ளது (அப். 2:38, 47; 1 கொரி. 12:13; எபே. 1:22, 23; 5:23, 25) - மற்றும் நாம் உற்சாகமூட்டுதலைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு சபையுடன் நாம் இணைந்து ஊழியம் செய்வதும் ஆராதிப்பதும் அவசியமாகின்றது.[22]

## முடிவுரை

பரிசுத்த ஆவியானவர் வேதாகம வீரர்களைப் பற்றிய தமது சித்திரங் களைச் சித்தரித்தபோது, அவர்களின் மருக்கள் மற்றும் (பிழைகள்) எல்லா வற்றையும் அவர் சித்தரித்தார். இது சிலரைக் கவலைப் படுத்துகின்றது, ஆனால் இது எனக்கு உதவுகின்றது. இது, பாவம் தங்கள் வாழ்வில் பிரவேசிக் கக் கூடாத அளவுக்கு எவரொருவரும் அவ்வளவு பலசாலிகள் இல்லை என்பதை நான் உணர்ந்தறியச் செய்கின்றது. இது நான் விழிப்புடன் இருக்கும்படி எனக்கு அறைகூவல் விடுக்கின்றது. இது, தங்கள் இருதயம் உடைபடக் கூடியவர்களாய் இருக்கின்றவரை, எவரொருவரும் கர்த்தருடைய மன்னிப்பிற்கு அப்பால் சென்று விட முடியாது என்பதை நான் உணர்ந்தறியவும் செய்கின்றது. இது என்னையே நான் தேவனுடைய இரக்கங்களிடமாய் முன்வைத்துவிட எனக்குத் தைரியம் கொடுக்கின்றது.

நாம் படித்துள்ள இந்த வரலாறு, பெரும்பாலான பாகம் இழிந்த நிலையுடையதாக உள்ளது, ஆனால் மகிழ்வான முடிவை நீங்கள் எதிர் பார்த்தீர்கள் என்று நான் நம்புகின்றேன். தாவீது கர்த்தரிடமாக மீண்டும் கட்டியெழுப்பப்பட்டார். அவர் தம் வாழ்வில் இருந்த எல்லா விதமான இடர்ப்பாடுகள் மத்தியிலும் கூட, அவரைத் தொடர்ந்து வந்த மற்ற எல்லா அரசர்களுக்கும் தராதரமான மாதிரியானார் (1 இரா. 15:3). அவரது மரணத்திற்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும்கூட, தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதர் என்று அறியப்பட்டிருந்தார் (அப். 13:22).

*தாவீது தொடப்படக் கூடிய இருதயம் ஒன்றைக் கொண்டிருந்தார்.*

*உங்கள் வாழ்வு என்ன வடிவில் உள்ளதென்று எனக்குத் தெரியாது; ஆனால் அது தாவீது பத்சேபாளுடன் பாவத்திற்கு உட்பட்ட பின்பு கொண்டிருந்த வாழ்வைப் போல் அவ்வளவு மோசமானதாக இருந்தாலும், உங்களுக்கு நான் இதை உறுதிப்படுத்த என்னை அனுமதியுங்கள்: நீங்கள் உங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி, அந்தப் பாவத்திலிருந்து திரும்பி, தேவனுடைய சித்தத்தைச் செய்ய மனவிருப்பம் கொண்டிருந்தால் - உங்கள் வரலாறும் ஒரு மகிழ்வான முடிவைக் கொண்டிருக்கக் கூடும்!*

---

## *பிரசங்கக் குறிப்புகள்*

*யாக்கோபு 1:14, 15ல் புறக்குறிப்பிடப்பட்டுள்ள பாவத்தின் படிப் படியான வளர்ச்சிக்கு விரிவான ஒரு உதாரணமாக அத்தியாயம் 11ஐப் பயன்படுத்த முடியும். இந்தப் பாடப்பொருளை, சார்லஸ் ஸ்வின்டால் அவர்கள் பின்வருமாறு புறக்குறிப்பிடுகின்றார்: "தீ[விர] உணர்வுட்டும் ஒரு பார்வை", "காமம் நிறைந்த ஒரு செயல்", மற்றும் "காலம் தாழ்த்தி வந்த விளைவுகள்'' [ஆங்கிலத்தில் இந்த தலைப்புகள் மூன்று " L" களாக வருகின்றன:* "A Lurid Look'', "A Lustful Act", and " Lingering Results" ] (Study guide on *David, A Man After God's Own Heart* [Fullerton, Calif.: Insight for Living], 102, 103).

*இந்த நாட்களில், "பாதுகாப்பான பாலுறவு" பற்றி, உலகப்பிரகாரமான உரை நிகழ்த்தும் மேடைகள் எல்லாவற்றிலுமிருந்து பிரசங்கிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், விபசாரபாவம் மற்றும் அதன் விளைவுகள் பற்றி பலம் வாய்ந்த போதனை அவசியமாகின்றது (நீதி. 6:32). Finding the Heart To Go On,* ([San Bernardino, Calif.: Here's Life Publishers, 1992], 129-33) *என்ற புத்தகத்தில் லின் ஆண்டர்ஸன் அவர்கள் எழுதிய நான்கு தகுதிக்கூற்று உண்மைகளைக் கவனியுங்கள். ''பாதுகாப்பான பாலுறவு'' என்பதைப் போதிப்பதற்குப் பதிலாக நாம் ''பரிசுத்தமான பாலுறவு'' (அதாவது, தேவனால் அங்கிகரிக்கப்பட்ட திருமணத்தில்) என்பதைப் போதிக்க வேண்டியது அவசியமாக உள்ளது.*

*இந்தப் பாடத்தில் உள்ள நிகழ்ச்சிகள் நடந்தபோது, தாவீது ஏறக் குறைய ஐம்பது வயதுள்ளவராக இருந்தார் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது, மனிதர்களின் வாழ்வுக்கால மையப்பகுதியில் ஏற்படும் இடர்ப் பாடுகளின் பாடத்திற்கு ஒரு தொடக்கக் கருத்தாக இருக்கக் கூடும்.*

*நாத்தான் தாவீதின் பாவத்தை வெளிப்படுத்திய உதாரணம், "எதிர்த்து நிற்கப் போதிய அளவு அக்கறை கொள்ளுதல்" என்பதன் அவசியத்தைக் காண்பிக்கின்றது (நீதி. 27:5, 6) - மற்றும் இது எவ்வாறு எதிர்த்து நிற்க வேண்டும் என்பதையும் காண்பிக்கின்றது (கலா. 6:1; நீதி. 15:23; 25:11). எதிர்த்து நிற்றல் என்பது பற்றி நாத்தானிடமிருந்து ஐந்து உட்கருத்துக்களை லின் ஆண்டர்ஸன் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்* (*Finding the Heart To Go On,* 144-48). *நாம் மக்களை நேசித்தால், அவர்கள் வாழ்வில் அவர்களை*

*உடல்ரீதியாக, உணர்வுரீதியாக, மற்றும்/அல்லது ஆவிக்குரிய வகையில் அழிக்கின்ற விஷயங்களை நாம் கவனிக்காமல் இருந்து விட முடியாது.*

*தாவீதின் மகனுடைய மரணம் பற்றிய வரலாறு, பிள்ளைகளை இழந்து தவிப்பவர்களுக்கு ஆறுதல் கூற அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றது. இது, "நாம் நேசிக்கின்றவர்கள் மரிக்கின்றபோது" என்ற பொதுவான பாடம் ஒன்றிற்கு அடிப்படையாக இருக்க முடியும்.*

*சங்கீதம் 51ன் மீதான துணைப்பிரசங்கங்கள் போதிக்கப்பட முடியும்.*

---

*குறிப்புகள்*

*[1]இந்த வெளியீட்டின் ஜூலை 1987 பதிப்பில் இதே போன்ற பிரசங்கம் ஒன்று இதே தலைப்புடன் வெளியாயிற்று. அந்தப் பாடம், இப்பாடத் தொடரின் வடிவமைப்புக்கு பொருந்தி வரும் வகையில் விரிவாக்கப்பட்டு, திருத்தப் பட்டுள்ளது. [2]வீட்டிலேயே தங்கியிருந்து விடுதல் என்பது முற்றிலுமாகத் தாவீதின் முடிவாக/எண்ணமாக இராதிருக்கலாம் (2 சாமு. 18:3; 21:17). இருந்தபோதிலும், எருசலேமில் தங்கியிருந்தமைக்கான கடைசி முடிவெடுத்தலில் இன்னமும் தாவீது பொறுப்பேற்க வேண்டியவராகவே இருந்தார். [3]"தன் படுக்கையிலிருந்து எழுந்து" என்ற உண்மையானது, அவர் மதிய நேரத்தில் சிற்றுறக்கம் கொண்டிருந்தார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றது. [4]பத்சேபாளின் குற்றத்தன்மை அல்லது குற்றமற்ற தன்மை பற்றி வேத வசனப்பகுதி மௌனம் காக்கின்றது. தாவீதின் இச்சையில் அவள் எந்த அளவுக்குப் பங்களித்தாள்? அவள் தன்னைத் தாவீதுக்கு மனப்பூர்வமாய் ஒப்படைத்தாளா அல்லது மறுப்புடன் ஒப்புவித்தாளா? அவள் உரியாவின் மரணத்திற்காக உண்மை யிலேயே துக்கம் அனுசரித்தாளா அல்லது அது வெறும் பாசாங்கா? இந்தக் கேள்வி களுக்கு நாம் பதில் அளிக்க முடியாது. ஏவுதல் பெற்ற எழுத்தாளரைப் பொறுத்த மட்டில் இது தாவீதின் பாவமாயிருந்தது. எழுத்தாளர் தாவீதைக் குறித்து மட்டுமே அக்கறை உடையவராயிருந்தார். [5]பத்சேபாள் எங்கே குளித்துக் கொண்டிருந்தாள் என்பதையோ அல்லது அவளைத் தாவீது எவ்வாறு பார்க்க முடிந்தது என்பதையோ நாம் அறிவதில்லை. உண்மையில் பத்சேபாள் என்ன செய்து கொண்டிருந்தாள் என்பதைக் கூட நாம் அறிவதில்லை. அவள் ஒருவேளை தனது உடலின் ஒரு பகுதியை மாத்திரம் கழுவிக் கொண்டு இருந்திருக்கக் கூடும். அவள் முற்றிலுமாக ஆடையின்றி இருந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. அவள் தன்னை ஒரு இரையாக வைத்து தாவீதுக்கு ஒரு வலை விரித்தாள் என்று நாம் கற்பனை செய்ய முடியாது. [6]2 சாமுவேல் 11:4ல், "பிற்பாடு அவள் தன் தீட்டு நீங்கும்படி சுத்திகரித்துக் கொண்டு தன் வீட்டுக்குப் போனாள்" என்றுள்ளது. புறீயில் "அவன் அவளுடன் சயனித்தான் (ஏனெனில் அவள் தன் தீட்டு நீங்கிச் சுத்திகரமாயிருந்தாள்)" என்றுள்ளது (KJV & NKJV ஆகியவற்றையும் காணவும்). RSVயில் "(இப்பொழுது அவள் தன் தீட்டிலிருந்து தன்னைச் சுத்திகரித்துக் கொண்டிருந்ததால்)" என்றுள்ளது. NIVயில் "(அவள் தன் தீட்டிலிருந்து தன்னைச் சுத்திகரித்திருந்தாள்.) பின்பு அவள் வீட்டுக்குப் போனாள்" என்றுள்ளது. "தீட்டு" என்பது அநேகமாக அவளது மாதவிடாய் காலத்தைக் குறிப்பதாயிருக்கலாம், அந்த வேளையில் பெண், ஏழு நாட்களுக்கு சடங்காச்சார ரீதியாக அசுத்தமாயிருப்பாள் (லேவி. 15:19-24). எழுத்தாளர் அநேகமாக, அவள் தாவீதிடம் வந்தபோது கர்ப்பமாய் இருக்கவில்லை என்பதை நிரூபிப்பதற்காக, அவள் மாதவிடாய் முடிந்த பின்பு உடனே இந்த விபசாரம் நடைபெற்றது என்று சுட்டிக் காண்பித்திருக்கலாம். பல நாட்களுக்குப் பின்பு தாவீது இதைப் பற்றி விசாரித்தால், இது பத்சேபாள் எவ்வாறு*

அவ்வளவு சுலபமாகக் கர்ப்பமானாள் என்பதற்கு ஒரு விளக்கமாகவும் இருக்கலாம். இது வசனம் 2ன் "ஸ்நானம்பண்ணுதல்" என்பதற்கும் ஒரு விளக்கமாக இருக்கலாம்; அவள் தன்னைச் சுத்திகரிப்பதற்காகக் குளித்திருக்கலாம். தூய்மை பற்றிய அவளது அக்கறைக்கும், தாவீதின் அக்கறைக் குறைவுக்கும் இடையிலும் கூட - நோக்கத்துடனோ அல்லது நோக்கமின்றியோ - ஒரு நேரெதிர்க் கருத்து உள்ளது. [7]ஆதியாகமம் 43:34ல் "பரிசு" என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள எபிரெய வார்த்தை உணவைக் குறிக்கின்றது. KJV, ASV, NKJV ஆகியவை, 2 சாமுவேல் 11:8ல் உள்ள பரிசு என்பது வீட்டிற்கு எடுத்துச் செல்லக்கூடிய உணவுப் பரிசு என்பதை உறுதி செய்கின்றன. (தமிழில் இவ்வார்த்தை எவ்வித ஐயத்திற்கும் இடமற்ற வகையில் "உச்சிதமான பதார்த்தங்கள்" என்றுள்ளது.) [8]இது, பல ஆண்டுகளுக்கு முன்பாக பெலிஸ்தர் கையில் பேழை அகப்பட்டதை விளைவித்த அப்படிப்பட்ட அரிய நிகழ்வுக்குப் பின்பு, அவர்கள் பேழையை யுத்தம் நடைபெற்ற இடத்திற்குக் கொண்டு சென்றார்கள் என்று அர்த்தப்படுத்துகின்றதா? (1 சாமு. 4) அவ்வாறு அர்த்தப்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை - பேழையானது எருசலேமில் ஒரு தற்காலிகக் கூடாரத்தில்தான் இருந்தது. பேழை ரப்பாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தால், அது அநேகமாக ஆராதனை நோக்கங் களுக்காகவே அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டிருக்க வேண்டும். பேழையை நல்லதிர்ஷ்டச் சின்னம் என்ற வகையில் சுமந்து செல்லக் கூடாது என்பதைத் தாவீது அறிந்திருந்தார் (இ.வ. 2 சாமு. 15:25). [9]2 சாமுவேல் 11:21, 23, 24ஐக் கவனிக்கவும். 2 சாமுவேல் 12:9, உரியா "அம்மோன் புத்திரரின் பட்டயத்தினால்" இறந்தார் என்று கூறுகின்றது, ஆனால் இது அம்மோனியர்கள் அவரை யுத்தத்தில் கொன்றார்கள் என்று மட்டும் அர்த்தப்படுத்த முடியும். [10]அபிமெலேக்கு நகரின் மதிலுக்கு வெகு அருகில் இருந்ததால் ஏந்திரக் கல்லினால் கொல்லப்பட்டது பற்றித் தாவீது ஏதாவது சொல்லுவார் என்பதை யோவாப் முன் எதிர்பார்த்திருந்தார். அந்த வரலாற்றை நியாயாதிபதிகள் 9:50-57 வசனப் பகுதி கூறுகின்றது. இது எல்லா இராணுவத் தலைவர்களுக்கும் நன்கு அறியப்பட்டிருந்த பொருட் செறிவுள்ள பாடமாக இருந்திருக்கலாம்.

[11]அவளது துக்கம் கொண்டாடுதல் உண்மையானதா இல்லையா என்பது பற்றி நமக்கு எதுவும் கூறப்படுவதில்லை, மற்றும் அதை யூகித்தறிவதில் சிறிதளவே மதிப்புள்ளது. [12]குழந்தை பிறந்தபோது, அவ்விஷயம் எவ்வளவு தூரம் பரவிற்று என்பதைக் கவனியுங்கள்: 2 சாமுவேல் 12:14. [13]இன்னொருவரைக் குடிமயக்கத்திற்கு ஆளாக்கும் பாவத்தைப் பற்றியும் (ஆப. 2:15, 16), பிற பாவங்களைப் பற்றியும் இங்கு குறிப்பிடவில்லை. [14]தாவீதின் பாவத்திற்குப் பிந்திய விளைவின்போது சங்கீதம் 32 எழுதப் பட்டதாகப் பலம்மிக்கதொரு பாரம்பரியம் கூறுகின்றது. [15]நாம் நாத்தானை இவ்வரலாற்றில், இதற்கு முன் கடைசியாக, தாவீது ஆலயம் கட்டத் திட்டம் வகுத்துக் கொண்டிருந்த வேளையில் கண்டோம் (2 சாமு. 7). [16]நம்மில் உள்ள பாவங்களைக் காண்பதை விட மற்றவர்களில் உள்ள பாவங்களைக் காண்பது மிகவும் சுலபம். [17]தாவீது தம் வார்த்தைகளினால் தமக்குத் தாமே ஆக்கினைத் தீர்ப்பிட்டார். அவரே பரிவிரக்கம் காண்பிக்காத அந்த மனிதனாயிருந்தார். [18]இது யாத்திராகமம் 22:1ல் கூறப்பட்டபடி செய்ய வேண்டியதாயிருந்தது. [19]நாத்தானின் உவமையில் வந்த அந்த மனிதன் தன் குற்றத்திற்குச் சட்ட பூர்வமாக மரண தண்டனை பெற வேண்டியவனாக இல்லாதிருந்தும், தாவீது அவனுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்று தீர்ப்பிட்டார். இதற்கு மறுபுறத்தில், தாவீது தமது விபசாரம் மற்றும் கொலை ஆகியவற்றிற்கு மரண தண்டனை பெறத் தகுதியானவராயிருந்தார் (லேவி. 20:10; 24:17), ஆனால் அவரை அந்தத் தண்டனையில் இருந்து கர்த்தர் கிருபையாய் விடுவித்தார். [20]சங்கீதம் 32:1, 2. சங்கீதம்

*32 எபிரெயத்திலிருந்து நேரடியாக மொழிபெயர்க்கப் பட்டும், அப்போஸ்தலர்கள் அதன் கிரேக்க மொழிபெயர்ப்பை (செப்துவஜிந்த்) மேற்கோள் காண்பித்தும் இருப்பதால் வார்த்தையமைப்பு சற்றே மாறுபடுகின்றது.*

*[21]நான் இதைப் பிரசங்கிக்கும்போது, "உங்கள் முன்னால் இருக்கின்றவர், உங்களுக்குப் பின்னால் இருக்கின்றவர், உங்களுக்கு வலது புறம் இருக்கின்றவர், உங்களுக்கு இடதுபுறம் இருக்கின்றவர் பாவியாக உள்ளார் என்று நான் கூரும் போது, நான் உங்களுக்கு அதிர்ச்சியூட்ட மாட்டேன் என்றே நினைக்கின்றேன். நாம் யாவரும் பாவிகளாக இருக்கின்றோம்" என்று கூறுவதுண்டு. [22]நான் இந்தப் பிரசங்கத்தைப் பிரசங்கிக்கும்போது, இந்த இடத்தில் நான் பொதுவாகப் புன்சிரிப்பைச் சிந்தி, "நான் மிக நேர்த்தியாக எடுத்துரைக்கும் பட்சத்தில், இந்த சபைக்குழுமம் அவ்வகையிலான சபைக்குழுமமாக உள்ளது என்று நான் நம்புகின்றேன். நீங்கள் எங்களுடன் அங்கமாவீர்கள் என்று நான் உண்மையில் நம்புகின்றேன். அது உங்கள் வாழ்வை ஆசீர்வதிக்கும் என்றும் நான் நம்புகின்றேன்" என்று கூறுவதுண்டு.*

---

# தாவீதின் குழந்தை இறந்தபோது

## *2 சாமுவேல் 12:15-24*

*பத்சேபாளிடத்தில் தாவீது பாவத்திற்கு உட்பட்டபின்பு, நாத்தான் தாவீதை எதிர்த்து நின்று, "நீ சாகாதபடிக்கு, கர்த்தர் உன் பாவம் நீங்கச் செய்தார். ஆனாலும் இந்தக் காரியத்தினாலே கர்த்தருடைய சத்தருக்கள் தூஷிக்க நீ காரணமாயிருந்தபடியினால், உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாய்ச் சாகும்"[1] என்று சொன்னார் (2 சாமு. 12:13, 14). நாத்தான் சென்றவுடனே, குழந்தையைப் பாதுகாக்கும் இடத்தில் இருந்து, பச்சிளம் குழந்தையின் அலறல் ஒன்று வெளிப்பட்டது,[2] அது தாவீதின் எலும்புகளை உறையச் செய்யும் அலறலாயிருந்தது. "அப்பொழுது கர்த்தர் உரியாவின் மனைவி தாவீதுக்குப் பெற்ற ஆண்பிள்ளையை அடித்தார்;[3] அது வியாதிப்பட்டுக் கேவலமாயிருந்தது" (வ. 15).*

*பிள்ளைகள் வியாதிப்படுகின்றார்கள்; பிள்ளைகள் இறந்து போகின்றார்கள். இது நாம் நினைத்துப் பார்க்க விரும்பும் சத்தியமாயிருப்பது இல்லை; இது நாம் எதிர்கொள்ள விரும்பும் சத்தியமாயிருப்பதும் இல்லை; ஆனாலும் கூட இது உண்மையானதாகவே உள்ளது. புதைக்குமிடத்தில் உள்ள சில கல்லறைகள் ஒரு சில அடி நீளமே உள்ளன. பிறக்கும்போதே இறந்த பிள்ளைகளின் சவ அடக்கங்களில் நான் பிரசங்கித்துள்ளேன். சில*

வேளைகளில் மரணத்திற்கான நியமனம் (எபி. 9:27) வாழ்வின் பிற்பகுதியில் வருவதற்குப் பதிலாக முற்பகுதியிலேயே வந்துவிடுகிறது.

## ஒரு குழந்தை வியாதிப்பட்டு இறக்கும்போது, அதற்குக் காரணம் ஒன்று இருக்கலாம்

தேவனுடைய நோக்கங்கள் யாவற்றையும் நாம் புரிந்து கொள்ள முடியாது; ''தேவன் பரதீசில் ஒளியேற்ற உங்கள் பிள்ளை தேவைப் பட்டதால், அதைத் தம்மிடத்தில் அழைத்துக் கொண்டார்'' என்று உறுதிபடக் கூறிவிட முடியாது. சில வேளைகளில் ஒரு பிள்ளையின் மரணம் என்பது கருத்துணர்வற்ற விஷயமாக உள்ளது, அது ஒரு பாவம் - வியாதி நிறைந்த உலகில் வாழ்வதன் விளைவாக உள்ளது. ஆயினும் நமது வேத பாட பகுதியானது, சிலவேளைகளில் இதற்குக் காரணம் உள்ளது என்று கூறுகிறது. இது என்ன என்று எல்லா வேளைகளிலும் நாம் அறிந்து கொள்வதில்லை, ஆனால் சில வேளைகளில் தேவன் ஒரு காரணத்தைக் கொண்டுள்ளார்.

தாவீதின் விஷயத்தில் உள்ளதுபோல், சிலவேளைகளில், பெற்றோர் களின் பாவம் என்பது [ம்] காரணமாயிருக்கலாம். இது நியாயமானதாக இருப்பதில்லை, ஆனால் வாழ்வு என்பது அவ்வகையாகத்தான் உள்ளது. குற்றம் செய்தவர்களின் பாவங்களுக்காக, ஒன்றுமறியாதவர்கள் பாதிக்கப்படுவதைப் பற்றி நாம் ஒவ்வொரு நாளும் நினைவூட்டப் படுகின்றோம். மதுபானத்திற்கோ அல்லது போதைப் பொருட்களுக்கோ அடிமையானவர்களுக்கு அல்லது எய்ட்ஸ் நோயுடன் குழந்தைகள் பிறக்கின்றன, இது பெற்றோர்களின் தவறினால் நடக்கிறது. ''என் குழந்தையின் இறப்பைக் கொண்டு தேவன் ஏன் என்னைத் தண்டிக்க வேண்டும்'' என்ற கேள்வியுடன் நீங்கள் உங்களையே கடுமையாகப் பார்க்க வேண்டும் என்பதற்காக நான் இதைக் கூறவதில்லை. இப்படிப்பட்ட கேள்விகள் சிறிதளவே மதிப்புடையவைகளாக இருக்கின்றன. சில வேளை களில் இது உண்மையாய் இருப்பதால் மட்டுமே நான் இந்தச் சாத்தியக் கூற்றைக் குறிப்பிடுகின்றேன்.

பெரும்பாலான வேளைகளின் பச்சிளம் குழந்தையின் மரணமானது அந்தக் குழந்தைக்கு ஒரு ஆசீர்வாதமாகவே உள்ளது. அது வாழ்ந்திருந்தால், அதற்கு உடல்ரீதியாகவோ அல்லது வேறு விதமாகவோ தீவிரமான தொந்தரவுகள் ஏற்படுவதாயிருக்கலாம். தாவீதின் பாவம் அறியப்பட்ட பின் அவருக்கு [அந்த விபச்சார உறவில்] பிறந்த அந்தக் குழந்தையுடன் எப்பொழுதும் பாவத்தின் களங்கம் ஒட்டிக் கொண்டு இருந்திருக்கும் என்ற காரணத்தினால் தேவன் தாவீதின் அந்தக் குழந்தையை இறந்து போக அனு மதித்து இருந்திருக்கலாம். அந்தக் காலத்தில் சட்டவிரோதமாகப் பிறந்த, “முறைகேடாய்ப் பிறந்த” பிள்ளையாக இருத்தல் என்பது ஒரு பயங்கரமான விஷயமாக இருந்தது. இது தேவனுடைய சிந்தனையின் ஒரு பகுதியாக இருந்ததா இல்லையா என்பதை நாம் அறிவதில்லை - நாம் தேவனுடைய நினைவுகளை அறிய முடியாது (ஏசா. 55:8, 9) - ஆனால், சிலவேளைகளில்

*பச்சிளம் குழந்தையின் மரணம் என்பது உண்மையில் ''மிகச் சிறந்தவற்றிற்காக'' ஏற்படுகிறது என்பதை நாம் அறிந்திருக்கின்றோம்.*

## ஒரு குழந்தை வியாதிப்பட்டுக் கிடக்கின்றபோது, நாம் நமக்குள்ள யாவற்றோடும் ஜெபிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது

*அவனுடைய பிள்ளை வியாதிப்பட்ட பொழுது ...*

> *அப்பொழுது தாவீது அந்தப் பிள்ளைக்காகத் தேவனிடத்தில் பிரார்த்தனை பண்ணி, உபவாசித்து, உள்ளேபோய், இராமுழுதும் தரையிலே கிடந்தான்.[4] அவனைத் தரையிலிருந்து எழுந்திருக்கப் பண்ண, அவன் வீட்டிலுள்ள மூப்பரானவர்கள் எழுந்து, அவனண்டை யில் வந்தாலும், அவன் மாட்டேன் என்று சொல்லி, அவர்களோடே அப்பம் சாப்பிடாமல் இருந்தான் (12:16, 17).*

*தாவீது, தேவனிடத்தில் தமது இருதயத்தை ஊற்றி, ஏழு நாட்கள் இரவும் பகலும் உணவு எதையும் உண்ணாமல், அந்தக் குழந்தையைக் காப்பாற்றும் படி தேவனிடம் கேட்டார். அந்தக் குழந்தை இறக்கும் என்று தேவன் ஏற்கனவே கூறியிருந்தும் கூட, தாவீது இதைச் செய்தது ஏன்? ஏனென்றால், தேவன் கடுமை தணிந்து கருணை அருளக்கூடிய சாத்தியக்கூறு இருந்தது என்று அவர் [தாவீது] நம்பினார் (12:22). மரண தண்டனைக்குப் பாத்திரமான பாவத்தினால் அவர்தாமே குற்றப்பட்டுக் கிடந்தும்கூட, தேவன் அவரிடத்தில் "நீ சாகாதபடிக்கு ..." (12:13) என்று கூறி அவரைக் காப்பாற்றியிருந்தாரே!*

*ஒரு குழந்தைக்கு என்ன நடந்திருப்பினும், அதன் சூழ்நிலை எவ்வளவு நம்பிக்கையற்றதாகக் காணப்பட்டிருப்பினும், ஜெபம் என்பது எப்போதும் ஏற்புடையதாகவே உள்ளது; ஏனெனில், நமது தேவன் இரக்கமுள்ளவராக இருக்கின்றார் (12:22).*

## ஒரு குழந்தை இறக்கின்றபோது, அவ்வேளையானது நமது வாழ்வின் [உடைந்த] துண்டுகளை எடுத்துக் கொண்டு [தொடர்ந்து] நடைபோட வேண்டிய வேளையாக உள்ளது

*தேவன் தமது பிள்ளைகளின் ஜெபத்திற்கு எப்போதும் பதில் அளிக்கின்றார், ஆனால் சில வேளைகளில் "இல்லை" என்பதே பதிலாக உள்ளது. இது கற்றுக் கொள்ள ஒரு கடினமான பாடமாக உள்ளது, ஆனால் இதை நாம் கற்றுக் கொண்டாக வேண்டும். தாவீதின் ஊக்கமான, இருதய உணர்வுள்ள ஜெபத்திற்குப் பின்பும்கூட, ஏழு நாட்கள் உபத்திரவப்பட்ட அந்தக் குழந்தை இறந்துபோயிற்று. அது நடந்தபோது, தாவீதின் வேலைக் காரர்கள் அவரிடத்தில் அந்தச் செய்தியைக் கூறுவதற்கு அஞ்சினார்கள்.*

*அவர்கள், "பிள்ளை உயிரோடிருக்கையில், நாம் அவரோடே பேசுகிற போது, அவர் நம்முடைய சொற்கேட்கவில்லை; பிள்ளை செத்துப் போயிற்று என்று அவரோடே எப்படிச் சொல்லுவோம்? அதிகமாக வியாகுலப்படுவாரே!" (12:18) என்று அவர்கள் பேசிக் கொண்டார்கள்.*

*தாவீது, தமது வேலைக்காரர்கள் இரகசியமாயப் பேசிக்கொள்ளு கிறதைக் கண்டபோது, அவர் அந்தக் குழந்தை இறந்து போயிற்று என்று அறிந்தார். அது உண்மையென்று வேலைக்காரர்கள் உறுதிப்படுத்தியபோது, அவர் அடுத்துச் செய்தது வேலைக்காரர்களைத் திகைப்பில் ஆழ்த்திற்று. "அப்பொழுது தாவீது தரையை விட்டு எழுந்து, ஸ்நானம்பண்ணி, எண்ணெய் பூசிக்கொண்டு, தன் வஸ்திரங்களை மாற்றி, கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்து, பணிந்துகொண்டு, தன் வீட்டுக்கு வந்து, போஜனம் கேட்டான்; அவன் முன்னே அதை வைத்தபோது புசித்தான்" (12:20). இன்றைய நாட்களில் இதை நாம், "அவர் தமது முழங்கால் களிலிருந்து எழுந்து, குளித்துவிட்டு, உடைமாற்றி, நல்லதொரு காலை உணவை உண்டார், பின்பு அலுவலகம் சென்றார்" என்று கூறலாம். தாவீது அந்தக் குழந்தையைத் திரும்பி வரப் பண்ண முடியவில்லை (வ. 23). நீட்டிக்கப்படும் துக்கமானது அவரது மகனுக்கு எவ்விதத்திலும் உதவி செய்திருக்காது; அது தாவீதின் மனதைப் புண்படுத்த மட்டுமே செய்யும். எவ்வளவு கடினமான வேளையாக இருந்தாலும், அவர் தமது வாழ்வின் அன்றாடப் பணிகளைச் செய்யச் செல்ல வேண்டியதாயிற்று.*

## ஒரு குழந்தை இறக்கின்றபோது, நாம் பரலோகத்திற்குரிய ஒரு மறுபிணைப்புக்கு நம்மைத் தயார் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது

*தாவீதின் செயல்களினிமித்தம் திகைப்படைந்த அவரது வேலைக்காரர் கள், "நீர் செய்கிறது என்ன? பிள்ளை உயிரோடிருக்கையில் உபவாசித்து அழுதீர்; பிள்ளை மரித்த பின்பு, எழுந்திருந்து அசனம் பண்ணுகிறீரே" (12:21) என்று அவரிடத்தில் கேட்டார்கள். இதற்குத் தாவீது அளித்த பின்வரும் பதில் மிகவும் சிறப்புடையதாக உள்ளது:*

> *பிள்ளை இன்னும் உயிரோடிருக்கையில், "பிள்ளை பிழைக்கும் படிக்குக் கர்த்தர் எனக்கு இரங்குவாரோ, எப்படியோ, யாருக்குத் தெரியும்" என்று உபவாசித்து அழுதேன். அது மரித்திருக்கிற இப்போது நான் உபவாசிக்கவேண்டியது என்ன? இனி நான் அதைத் திரும்பி வரப்பண்ணக்கூடுமோ? நான் அதினிடத்துக்குப் போவேனே அல்லாமல், அது என்னிடத்துக்குத் திரும்பி வரப்போகிறது இல்லை (12:22, 23) என்றான்.*

*இந்த வேத வசனங்களில் ஏதேனும் தெளிவாகப் போதிக்கப் பட்டுள்ளது என்றால் அது, ஒரு இளம் குழந்தை இறக்கின்றபோது, அந்தக்*

*குழந்தை பரலோகம் செல்லுகின்றது என்பதேயாகும் (மத். 18:3; 19:14). இந்த பூமியில் பெற்றோர் என்ற வகையில் நமது கரங்களில் இருந்து பறிக்கப்பட்ட அந்தப் பச்சிளங்குழந்தைகளின் கரங்களை மீண்டும் பற்றிக் கொண்டு, அவர்களை அரவணைக்கும் அற்புதமான மறுபிணைப்பைப்பற்றி நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா?[5] ஆயினும் ஒரு "பிடி" உண்டு. நான் எனது விலைமதிப்பற்ற குழந்தையுடன் மறுபடியும் பிணைக்கப்பட வேண்டும் என்றால், நான் பரலோகத்திற்குச் செல்ல வேண்டும். நான் அதற்குத் தயாராக இருக்கின்றேனா? நீங்கள் அதற்குத் தயாராக இருக்கின்றீர்களா?*

*உண்மையில் தாவீது, "அவனை நான் மீண்டும் இங்கு கொண்டு வர முடியாது, ஆனால் என்னால் அவனிடத்திற்குச் செல்ல முடியும்" என்றே கூறினார்.[6] குழந்தையொன்றை இழந்த எல்லாப் பெற்றோர்களின் தீர்மானமும் இப்படிப்பட்டதாகவே இருக்க வேண்டும் என்பதற்காக நான் ஜெபிக்கின்றேன்.*

## ஒரு குழந்தை இறக்கின்றபோது, நாம் எல்லாவற்றையும் தேவனுடைய கரங்களில் விட்டுவிட வேண்டியதாக உள்ளது

*தாவீது கோபமும் கசப்புணர்வும் கொண்டவராக இருந்திருக்கக் கூடும். அவர் தேவனைக் குற்றப்படுத்தியிருந்திருக்கக் கூடும். அவர் தேவனுடன் விவாதித்து இருந்திருக்கக் கூடும். ஆனால் இவைகளில் எதையும் அவர் செய்யவில்லை, இதற்குப் பதிலாக அவர், "கர்த்தருடைய ஆலயத்தில்[7] பிரவேசித்து, பணிந்துகொண்டார்" (12:20). விஷயங்களைத் தெளிவாக்கு வதற்குத் தேவன் மாத்திரமே நமக்கு உதவ முடியும்.*

*முன்பே குறிப்பிட்டபடி, நாம் தேவனுடைய சிந்தையை அறிய இயலாது. நாம் கற்பனை செய்து காணவும் முடியாத அற்புதமான விஷயங்களைத் தேவன் தமது பொக்கிஷ சாலையில் நமக்காக வைத்திருக்கலாம். தாவீதின் விஷயத்தில், தேவன் அவருக்கு இன்னொரு மகனை - சாலொமோன் என்று பெயரிடப்பட்ட ஒரு அற்புதமான மகனைக் - கொடுத்தார்.*

> *பின்பு தாவீது தன் மனைவியாகிய பத்சேபாளுக்கு ஆறுதல் சொல்லி, அவளிடத்தில் போய் அவளோடே சயனித்தான்; அவள் ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனுக்குச் சாலொமோன் என்று பேரிட்டான்; அவனிடத்தில் கர்த்தர் அன்பாயிருந்தார். அவர் தீர்க்கதரிசியாகிய நாத்தானை அனுப்ப, அவன் கர்த்தரின் நிமித்தம் அவனுக்கு யெதிதியா [கர்த்தரால் அன்புகூரப்பட்டவன்] என்று பேரிட்டான் (12:24, 25).*

*நீங்களும் கூட இன்னொரு பிள்ளையைப் பெறலாம்; அல்லது பெறாமலும் இருக்கலாம். என்ன நேர்ந்தாலும் நீங்கள் கர்த்தரிடத்தில்*

*நெருங்கியிருத்தலே மிகவும் முக்கியமானதாக உள்ளது. நீங்கள் அவ்வாறு இருந்தால், அவர் உங்கள் வாழ்வை ஆசீர்வதிப்பார். அவர் உண்மையிலேயே அவ்வாறு செய்வார்.*

---

*குறிப்புகள்*

*[1]அந்தக் குழந்தையின் மரணம் என்பது, தாவீதின் பாவத்தைக் குறித்து அவிசுவாசிகள் அறிந்த (அல்லது அறியவிருந்த) உண்மையுடன் நேரடியாகப் பிணைக்கப்பட்டுள்ளது. தாவீதின் செயல்களைத் தேவன் அங்கீகரிக்கவில்லை என்பதைச் செயல்விளக்கப்படுத்துவதற்கு உடனடியான, காணக்கூடிய அடையாளம் தேவைப்பட்டது என்பதே இங்கு கருத்தாயிருக்கலாம். [2]அந்தக் குழந்தையின் வயது மூன்று மாதங்கள் என்று சிலர் கணக் கிடுகின்றார்கள். [3]நாம் ஒருக்காலும் ஆழ்ந்தறிய முடியாத அளவுக்குத் தேவனுடைய அருளிரக்கங்கள் பற்றிய இரகசியங்கள் உள்ளன. பாவம் நிறைந்த தனிநபர்களைக் கருவியாகச் செயல்படுத்தியன் மூலம், 2 சாமுவேல் 12:10-14ன் மற்ற முன்னுரைத்தல் கள் யாவையும் நிறைவேற்றப்பட்டன. எடுத்துக்காட்டாக, தேவன் "... உன் ஸ்திரீகளை எடுத்து உனக்கு அடுத்தவனுக்குக் கொடுப்பேன் ..." (வ. 11) என்று கூறினார். ஆயினு ம் தேவன் இதை நேரடியாகச் செய்யவில்லை; மாறாக, தாவீது எருசலேமை விட்டு ஓடியபோது, அப்சலோம் அவர்களை [தாவீதின் மறுமனை யாட்டிகளை] எடுத்துக் கொண்டார். தேவன் எதிர்காலத்தைக் கண்ணோக்கினார், பின்பு அப்சலோம் அதைச் செய்ய அவர் அனுமதித்தார். பின்பு எப்படி தேவன் அந்தப் பிள்ளையை "அடித்து" அது வியாதிப்பட்டுக் கேவலமாயிருக்கும்படி செய்தார்? அதை அவரே செய்தாரா? - அல்லது அந்த நாட்களில் சாதாரணமாக, புதிதாய்ப் பிறக்கும் குழந்தைகளை அடிக்கடி கொன்றிருக்கக் கூடிய பொதுவான ஒரு வியாதியை அந்தக் குழந்தைக்கு அனுமதித்து, இயற்கையாக அது மரிக்கும்படி செய்தாரா? இதை நாம் ஒருக்காலும் அறிவதில்லை. ஆயினும், அது தாவீதின் பாவத்திற்காக ஏற்பட்ட ஒரு தெய்வீக தண்டனையாயிருந்தது என்பதை நாம் அறிய வேண்டும் என்றே ஏவப்பட்ட எழுத்தாளர் விரும்பினார். [4]ஒருவேளை தாவீது, உடன்படிக்கைப் பெட்டி இருந்த கூடாரத்தின் முன்னிலையில் தரையில் விழுந்து கிடந்திருக்கலாம். [5]பரலோகத்தில் நமது உறவுமுறைகள் இந்தப் பூமியில் இருப்பதைப் போல் அப்படியே இராது (மத். 22:30), ஆனால், நாம் பரலோகத்தில் "நாமாகவே" இருப்போம் மற்றும் நாம் ஒருவர் பிறரை அறிவோம் என்று வேதாகமம் போதிக் கிறது. நான் சித்தரித்துள்ள இந்தக் காட்சியைப் போன்ற சில காட்சிகள் - ஆவிக்குரிய அமைப்பில் இதை நாம் கற்பனை செய்தும் காண முடியாது - இருக்கலாம். [6]தாவீது, "அவனை நான் கல்லறையிலிருந்து திரும்பக் கொண்டு வர முடியாது, ஆனால் நான் ஒரு நாளில் கல்லறைக்குச் சென்று அவனுடன் இணைவேன்" என்று கூறியதாகப் பல விளக்கவுரையாளர்கள் நம்புகின்றார்கள். அப்படிப்பட்ட சிந்தனை யானது ஆறுதல்படுத்துவதற்குப் பதில் அதிகம் சோர்வூட்டுவதாகவே எனக்குக் காணப்பட்டாலும் ஒருவேளை இது மிகச் சரியானதாயிருக்கலாம். இந்த வாழ்வுக்கு அப்பால் உள்ள வாழ்வைப் பற்றிய புதிய ஏற்பாட்டுப் புரிந்து கொள்ளுதலுடன் இவ்வசனப்பகுதியை நாம் வாசிப்பதில் நாம் இவ்வசனப் பகுதிக்குச் சேதம் எதுவும் விளைவிப்பதில்லை என்றே நான் நினைக்கின்றேன். [7]ஒருவேளை தாவீது நுழைந்த இடம் என்பது, எருசலேமில் உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருந்த கூடாரமாக இருந்திருக்கலாம், ஆனால் அது கிபியோனில் இன்னும் உடன்படிக்கைக் கூடாரம் இருந்த இடமாயிருக்கவே அதிகம் வாய்ப்பு உள்ளது.*